[illegible]

[illegible] 6 [illegible] 3

1932 [illegible]

JL

ஜ211, N27 SN

N32·6·3.

186920

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF ...
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு சு. § ஆங்கீரச-ஐப்பசி 1932-அக்டோபர் § திங்கள் ங.

உள்ளுறை. பக்கம்.

க. ஒற்றுமைக்கு உற்றவழி எது? 81
உ. சீரிய சிவநேசர்களே ! 84
ங. சிவாலயங்களும் சைவ சமயமும் 85
ச. காலவியல்பு 88
ரு. வரவேற்புரை 89
சு. விநாயகரிடத்திற் குட்டிக்கொள்ளுதல் II 99
எ. ஓர் உபந்நியாசம் 102
அ. வரவேற்பு 106
கூ. கொண்டாட்டமா ! கொலையாட்டமா ? 114
க0. கோயில் 115
கக. தேவாராதிகளும்...ஓதத்தகுவோரும். 116
கஉ. தீண்டாதாரும் கோயிற் பிரவேசமும். 117
கங. குமாரவிநாயகர் பஞ்சரத்நம் 119
கச. சிவநேசனுக்கு மதிப்புரை ,,

ஆசிரியர் ராம. த. ராம. இராமசாமி செட்டியார்.
பலவான்குடி.

# செய்தித் திரட்டு.

உள்ளூர்:—சிவாலயத்தில்,புரட்டாதி ௰௫௳ அம்பிகைக்கு காப்புக்கட்டி, நவராத்திரி பூஜையும், ௨௪௳ விஜயதசமி விழாவும் நன்கு நிறைவேறின. கல்லூரி மாணவர்கள், ஜயவிஜயபவாவென ஆர்த்து, ௰௪௳ முதல் கிலுக்கெடுப்பு விழாக் கொண்டாடினர். துருவசரித்திரத்தை நாடகமாகச் சிறூர்கள் பலர் சேர்ந்து ௨௭௳ கூத்துமேடைமீ தேறி நடித்தனர். உள்ளூர் வெளியூர்களிலிருந்து பார்க்க வந்தவர்களும், மெடல் ஆதிய பரிசுகள் வழங்கினவர்களும் பலராவார். குமாரவிநாயகர் திருக்கோயிலில், ௨௮௳ சதுர்த்தசியில் நடராஜர் அபிடேகம் நடைபெற்றது.

கொப்பனாபட்டி:—மாணிக்கவாசக வித்தியாசாலையில் புரட்டாதி௯௳ புதுக்கோட்டை C. S. M. High School, Scout Master Mr. S. A. சின்னையா பிள்ளை அவர்களால் "விவேகாநந்தா படை" என்னும் பெயருடன் கலாசாலை மாணவர்களைக் கொண்டு சாரண இயக்கம் துவக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும், படையிற்சேர்ந்து கொண்டார்கள். ஷை படை Lions, Doves, Jackals என்று மூன்று அணிகளாகப் பிரிக்கப்பட்டது. Mr. S. A. சின்னையா பிள்ளையவர்கள் சாரணீய இயக்கத்தின் பெருமை, நோக்கம், அவசியம், சேர்ந்து பழகவேண்டிய முறை முதலியவற்றை மிக விளக்கி மாணவர்களை உற்சாகப்படுத்தினர்.

இவ்வித்தியாசாலை மாணவர் கழகச் சார்பில், புரட்டாதி ௨௫௳ நெற்குப்பை பண்டிதர் திருவாளர் லெ. ப. கரு. இராமநாதச் செட்டியார் தலைமையில் கலைமகள் விழா சிறப்பாக நடைபெற்றது.

ஆவினிப்பட்டி:—விவேகாநந்தர் கல்விக்கழகத்தின் ஆறாம்ஆண்டு நான்காம் மாசக்கூட்டம், 30—9—32ல் தபால் நிலையப்பரிசோதகர் ஸ்ரீமாந் எஸ். வீராசாமி ஐயர் தலைமையில், அருள், மூர்த்திநாயனார், கடவுள் வழிபாடு, அன்பு, சிதம்பரதரிசனம், மக்கள் முன்னேற்றம், மாகேசுர பூஜை என்னும் விரிவுரைகளுடன் நிகழ்ந்தது. தலைவர் தக்க முடிப்புரை புகன்று, அபிப்பிராயமும் புஸ்தகத்தில் வரைந்துள்ளார்.

இந்நகருக்குப் புதிய தபால் நிலையம் ஒன்று 1—10—32ல் திறக்கப்பெற்றிருக்கிறது.

இக்கழகச் சார்பில் ஒரு பெருங்கூட்டம் 7—10—32ல் நடைபெற்றது. தமிழ்ப்பண்டிதர் திரு. வ. மு. இரத்திநேசுவரையரால், "சுதேசமித்திரன்" பொன்விழாவைப்பற்றிச் சொற்பொழிவும், அருந்தொண்டைப் பாராட்டித் தந்தி கொடுப்பதென்ற பிரேரபணையும் நிகழ்ந்து யாவராலும் ஒப்புக்கொள்ளப்பெற்றன. கழகத்து மாணவர்கள், மணிவாசகப் பெருமான் சரிதத்தைப் புதிய உடைபாவனைகளுடன் நடித்துக்காட்டினர். ஆசிரியர் மணிவாசகர் மாண்பை இனிது விளக்கினர். லெ. கண்ணம்மை, ள. ஜானகி இருவரும் கானரசப் பாடல்களைப் பாடினர்.

பள்ளத்தூர்:—திருவாளர் அ. ராம. தெ. அளகப்பசெட்டியார், ஆவணி ௨௧௳ பக்கோவிலிருந்து பிரயாணமாகி ரெங்கோன் வந்து அங்கிருந்து ௨௫௳ வங்கமேறி, ௨௮௳ சென்னைவந்து சிதம்பரமாதிய திருத்தல சேவை செய்து, கன்னித் திங்களில் தமதில்லம் வந்து சேர்ந்தனர்.

OFFICE OF THE REGISTRAR OF B...
16 FEB 1934
MADRAS

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௬ } பலவான்குடி-ஆங்கீரச—ஐப்பசி { திங்கள் ௫.

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## ஒற்றுமைக்கு உற்றவழி எது?

ஒற்றுமை யுற்றால் உரம் பெறலாம் என்பது உலகவழக்கே. ஆயினும், ஒற்றுமை என்றால் என்ன? அதற்கு உற்ற வழி எது? என்று ஆராயவேண்டியதே இதன் முக்கிய நோக்கம்.

உலகிற் காணும் நால்வகைத் தோற்றம், எழுவகைப் பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிரம் சீவபேதங்களையும் வேற்றுமையின்றி ஒற்றுமைப்படுத்த யாராலும் இயலாது. ஒவ்வொரு தோற்றமும் ஒன்றற்கொன்று வேற்றுமை யுடைத்தாகவே யிருக்கும். அவைகளை யெல்லாம் ஒன்றாக்கிவிட்டால், சுயராஜ்யம் கிட்டிவிடுமென்று ஒருவரோ சிலரோ பலரோ கருதினால், எதுவும் ஆகுமா என்று ஆழ்ந்து யோசிக்கவேண்டியதாகும். இறைவன் கட்டளைப்படி ஆன்மகோடிகள் தத்தம் கன்மத்துக் கீடாகப் பல்வேறு பிறவிகளைப் பெறுதல் இயல்பே. ஓரறிவு முதல் ஆறறிவுவரை யுள்ள பிறவிகளில், சிறந்த மக்கட் பிறப்பினரே ஆறறிவோடுகூடி நன்று தீது பகுத்துணரும் பான்மையராவர். ஆகவே, மனிதர்கள் எல்லாம் ஓரினத்தவர்களே; அவர்களுள் பேதம் வேண்டுவதில்லை எனக்

கொள்ளும் சமரச ஞானிகள், வெள்ளையர் கறுப்பர்கள் என்னும் பேதங்கொள்ளுதலும் கூடாதே. ஓடுஞ் செம்பொனும் ஒக்கநோக்குந் தன்மையதாய, உலகபோகங்களை உவர்த்துக் கடந்த நிலையில் கைவரப்பெறும் சமரச ஞானத்தை, இடைப்பட்ட நிலையில் கையாளச் செய்வது இடர்ப்பாடேயாகும்.

தற்போதுள்ள சுயராஜ்யதாகங் காரணமாக சாதி சமயங்களெல்லாம் ஒன்றாய் விடவேண்டுமென்றால், சாதிசமயங்களின் பெயர்களெல்லாம் அறவே ஒழிந்துவிட வேண்டுமா? ஏதாவது ஒரே சாதி—ஒரே சமயம் கொள்ள வேண்டுமா? அப்படி ஆக்கவுங் காக்கவும் வல்லுநர் யாவர்? ஆலய நுழைவு காரணமாக நடைபெறுங் கிளர்ச்சிகள் ஒற்றுமைக் குற்ற வழிகளா? ஆலய சேவை கிடைக்கவில்லையே—ஆண்டவனைத் தெரிசித்து நித்திய இன்பத்தைப் பெற வேண்டுமே என்றுதான் தாழ்ந்த வகுப்பினர் ஏங்கி நிற்கின்றார்களா? அவர்களை உந்நத நிலைக்குக் கொண்டுவந்து, மேலினத்தவருடன் ஒற்றுமைப்படுத்த, ஆலய நுழைவுதான் அடுத்த செயலாமா? இவைகளெல்லாம் மேலும் கலகத்துக்குக் காரணமேயன்றி ஒற்றுமைக் குற்ற வழிகளல்ல.

“ஊரனந்தம் பெற்ற பேரனந்தஞ் சுற்று முறவனந் தம்வினையினால்—உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத் தோவனந் தம்பெற்றபேர், சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற் றெய்வமு மனந்தபேதம்—திகழ்கின்ற சமயமு மனந்தம்..............”

என்றருளிய பெரியாரின் திருவாக்குப்படி, சாதி சமயம் முதலிய யாவும் அனந்தம்; அனந்தமே. தெய்வ பேதங்களும் அனந்தமே. உலக முதல்வராகிய கடவுள் ஒருவரேயாக, அவரவர் பக்குவத்துக்குத்தக்கவாறு பலவேறு தெய்வ வழிபாடுகள் உலகில் நிகழ்வது இயல்பாயிருக்க, அவைகளையெல்லாம் ஒருநிலைப்படுத்தவும், ஒருசேர வழிபடவும் எக்காலத்தும் எவ்வாற்றானும் இயலவே இயலாதே. ஊர் பேர் சுற்றந் துணை உடல் வினை கருத்து பெறும்பெயர் சீர் சுவர்க்கம் நரகம் ஆகிய பேதங்களெல்லாம் ஒழிந்து ஒற்றுமையுற்றால்தான் சுயராஜ்யம் பெற முடியுமென்பது, எல்லோரும் சேர்ந்து ஒரு பெரிய மலையைத் தூக்கி யென் தலையில் வைத்தால் குறித்த இடத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கக்கூடுமென்பதையே ஒக்கும்.

186920



தெய்வ நம்பிக்கையற்றவர்களும், சிறு தெய்வ வழிபாடு செய்பவர்களும், ஆசார ஈனர்களும், தெய்வ நம்பிக்கையாகிய சிறந்த ஒழுக்கங்களுடன் கூடியவர்கள் வேதாகம விதிமுறை வழிபடும் திருக்கோயில்களிற் சென்று, அவர்களுடன் கலந்து, இருவகையாரும் ஆசார ஈனர்களாகுவதுதான் ஒற்றுமைக் குரியமுறையோ?

இதுவரை ஆசார ஈனர்கள், திருக்கோயில்களுட் பிரவேசிக்கவில்லையா? எனின், அவ்வாறான பிரவேசங்களைத் தடுத்தலும், பிராயசித்தங்கள் செய்தலும் கூடுமேயல்லாது, அப்படியே ஆசாரம் வழுவி யழியவிட வேண்டுமென்பதில்லை. ஆசாரங்களை ஒழித்துவிடுவதற்கு, அன்னபானீயம் விற்பவர்களும் அருமறை நெறிவழுவி ஆசாரத்தை விற்பவர்களும் இன்னமும் தலைகீழாக நின்று சாதி சமயப் பழக்கவழக்கங்களை ஒழிக்கப் பாடுபட்டு சாதி வித்தியாசமின்றி கொள்வன கொடுப்பன எல்லாம் செய்து கடைசியாக ஆலய நுழைவுக்கு ஒற்றுமை காட்டினாலும் அக்காலத்தும் அறந்தழுவு நெறியினர் அநாசார சம்பந்தத்திற்கு உடன்படாராகலின், எப்பொழுதும் நன்று தீது எனும் இரண்டும் ஒன்றுபடவே முடியாது. அவ்விரண்டிற்கும் வேற்றுமை வேரூன்றி நிற்குமேயன்றி ஒற்றுமையுறுதல் கூடுமென்பது முயற்கொம்பேயாகும். எழுவகைப் பிறவிகளுள்ளும் அவைகளில் ஒவ்வொன்றனுள்ளும் உருவ பேதங்களும் குண பேதங்களும் அளவிலவாயிருக்க, அவைகளையெல்லாம் ஒன்றாக்கி விடுவதென்பது உலகமெல்லாம் இறைவன்பால் ஒடுங்கி இறைவன் தன்னந்தனியனாய் நின்று தனிநடம் புரியுங்காலத்திற்றாகும்.

அபேதத்தன்மை மனமிறந்த நிலையில் வருமேயன்றி, மனம் உள்ளவரை பேதமிருந்தேவரும். ஆதலால், ஆகாத கிளர்ச்சிகளையுண்டுபண்ணி மக்களை அல்லலுக் குட்படுத்தாமல், தாழ்ந்தவர்கள் மேனிலைக்கு வரவும், ஒற்றுமையுற்று உரம்பெறவும் வழிதேடல் வேண்டும். தாழ்ந்தவர்கள் உயர்நிலைக்கு வர, நல்ல கல்வியும் அதனால் நல்லறிவும் கல்வியறிவு மேம்பாட்டால் நல்லொழுக்கமும் பெறல்வேண்டும். அங்ஙனம் பெறவே, பிறருதவியின்றித் தாமாகவே பலரும் மதிக்க உயர்நிலை பெறுதல் கூடும்.

“கடை நிலத்தோ ராயினும் கற்றுணர்ந்தோரைத், தலைநிலத்து வைக்கப்படும்.” என்றாங்கு, தாழ்ந்த சாதியிற் பிறந்தாராயினும்,

186920

அவர் தம் கல்வி யறிவு ஒழுக்கங்கண்டு உயர்ந்தோராகக் கொள்ளப் பெறுவர். உயர்ந்த சாதியார் தாழ்ந்த சாதியார் என்னும் பாகுபாடின்றி, அந்நிலையிலும் அறிவுடைய எவரும் எல்லாம் உடையராகவும், அறிவிலார் எவரும் ஏதும் இலராகவும், இரு வகுப்பினராகவே பிறங்குவர். ஆயினும், அறிவாளிகள் மிகுத்துழி உலக நிலையை நன்குணர்ந்து, இலம்பாடெய்திய எளிய மக்களையும் நலனுறச் செய்து, கடுஞ்சினம் பகையாதியவைகளை யறவே விடுத்து, பெரியவர் சிறியவரென்ற மரியாதைகளை வரன்முறையாக மேற்கொண்டு, பெரியாரைப் பேணி, பெரியார்களின் அரிய கட்டளைகளைச் சிரமேற்றாங்கி, அருளும் அன்பும் உடையவர்களாய் வாழக் கருதுவதே ஒற்றுமைக்கு உற்ற வழியாகும். அதற்கு ஏற்ற முறையில், உயர் நிலையிலுள்ளவர்கள் தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள்பால் இரக்கங் காட்டி, அவர்களின் உடல்நலம், உயிர்நலம் பேணும் உணவாதியனவும், உணர்ச்சி தருவனவும் ஆகிய கைத்தொழிலும் கல்வியும் இயன்ற அளவு உதவவும், அவ்வுதவிகளை அவர்கள் ஏற்று நலம் பெறவும் வேண்டுவதே, ஒருவரையொருவர் நேர்மையாய் நேசித்து ஒருமித்த மனத்துடன்வாழும் ஒற்றுமைக்கு உற்றவழியாகும்.

---

## சீரிய சிவநேசர்களே!

பாரத மித்திரன் கோவை—7, மணி—19, பக்கம்—7, பத்தி 1-ல் வெளிவந்த நீங்கள், உங்களின் இயற்பெயர்களை விளக்கவில்லையாயினும், நாம் குறிப்பிட்ட சிலரே யாவீர்கள்.

சற்குண சம்பன்னர்களாகிய நீங்கள், வேலன்குடியில் சிவநேசர் திருக்கூட்டத்தின் ஒன்பதாவதாண்டு நிறைவுவிழா முடிந்த பின்னர், அற்றைய நள்ளிரவிற் செய்த செயல் சீரிய செயலா? தீச்செயலா? என்பதை, நடுநிலைப் பெரியோர்களாய் விளங்கும் திருவாளர்களான—கண்டனூர் தெ. அரு. சித. அருணாசலச் செட்டியார், காரைக்குடி மு. த. வெ. வெள்ளையப்ப செட்டியார் ஆகிய எவர்கள் முன்னிலையிலேனும், நீதி மன்றங்களிலேனும், பத்திரிகைகளிலேனும் வாதித்துத் தெளிய, உங்களின் சம்மதத்தை யியற்பெயராகிய விவரங்களுடன் தெரிவிக்க முன்வருவீர்களா? இன்றேல், உங்களின் தவறை யுள்ளபடி யுணர்ந்து அமைவீர்களா? இடைப்பிறவரலாக நீங்கள் எழுதியவற்றைக் குறித்தும், நடந்த தீச்செயல் இன்னது, புரிந்தார், புரியத் தூண்டினவர், உடன்பட்டிருந்தவர் ஆகியோர் இன்னின்னார் என்பதையும், விளக்க வேண்டுழி விளக்குவாம்.

---

உ

# சிவாலயங்களும் சைவசமயமும்.

சிவாலயங்களைத் தத்தமக்குச் சொந்தமாக்க விரும்பும் எவரும், "ஆலயங்களெல்லாம் ஒரு மொழியின் நிலயமல்லவே; ஒரு சாதியின் நிலயமல்லவே: ஒரு சமயத்தின் நிலயமல்லவா? அச்சமயத்தை நாம் தழுவுகின்றோமா? அங்ஙனமாயினன்றோ ஆலயங்களில் நமக்கு உரிமை யெய்துதல் கூடும்?" என்றின்னோரன்னவற்றை யெல்லாம் நெஞ்சறியத் தமக்குள் விவகரித்துப் பார்த்தல் வேண்டும்.

அங்ஙனமின்றி ஆலயங்கள் தமிழர்க்கே யுரியன வென்றும், * வடமொழியாளர்க்கே யுரியனவென்றும் பிராமணர்க்கே யுரியன வென்றும், திராவிடர்க்கே யுரியனவென்றுங் கூறி, ஒரு சாதியார் அல்லது ஒருமொழியார் வழக்கிடுதல் சிறிதும் முறையன்று.

சாதிப்பெயர் மொழிப்பெயர்களெல்லாம் ஆலயங்களுக்கு உண்மையி லுரியரல்லாதாரினும் போய்ப்பற்றி அவருள் நாத்திகர் முதற் பல சமயத்தாரையும் அகப்படுத்தி நிற்றலான் வரம்புட்படாத வார்த்தைகளாகும். ஆதலின், அவ் வார்த்தைகளைப் போர்த்துக்கொண்டு ஆலயங்களைச் சுவீகரிக்க எண்ணுவது தமிழர் முதலிய யாவர்க்குந் தகாது. இந்து மதம் என்னும் பெயரும் சைவசமயமல்லாத பிற சமயங்களையும் போய்ப்பற்றி முன்னையவைபோல வரம்புட்படாததேயாகும். ஆகையால், இந்துமதப் போர்வையும் சிவாலயவுரிமையை உள்ளபடி தருதலில்லை.

பின்னை, சிவாலயங்கள் யாருக்குத் தான் உரியனவோ வெனின் அவை ஒரு சமயச் செல்வமாதலின் அச்சமயிகட்கே உரியன. அச்சமயிகளே வைதிகசைவர். அவருக்கே ஆகமியர் என்றொரு பெயரும் உண்டு. வடமொழிக்கணுள்ள இருக்காதி நான்கு வேதங்

---

* வடமொழி இந்தியர்க்கெல்லாம் பொது மொழி. அஃது ஒரு வகுப்பினர் மொழியன்று. எனினும், ஒரு சிலர் அது தமக்குரிய மொழியென்று சொல்லவும், மற்றும் ஒருசிலர் அஃது உண்மையென மயங்கலும் உண்மையின், இவ்வாறு கூறப்பட்டது.

களையும், காமிகாதி இருபத்தெட்டுச் சிவாகமங்களையும், தமிழ்க்கணுள்ள பன்னிரு திருமுறைகளையும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும், சிவஞான பாஷ்யத்தையும் பரமப்பிரமாணமெனவே ஆன்றோ ராசாரம்பற்றி விசுவசித்தொழுகும் நன்மக்களே அவ் வைதிக சைவர். இவ்வரம்பிற் கலங்காது உறைத்து நிற்கும் எவரும் வைதிக சைவரென அழைக்கப்பட்டு ஆலயங்களுக்கு உரிமையெய்துவர். இவ் விசுவாசத்தை யிகந்து திரிவோர் எவரேனுமாக அவர்க்கும் ஆலயங்கட்கும் ஒட்டு எட்டுணையுமில்லை. சமய நிலயம் சமயத்துக்குத்தானே யுரியது: சாதிக்கேது? மொழிக்கேது? ஆகையால், சிவாலயங்களைச் சுவீகரிப்பதற்குமுன் சைவசமயத்தைச் சுவீகரித்து அதன் வரம்பில் மேற்கூறியாங்கு நின்று கொள்வதே நியாயமாம்.

நமது நாட்டுச் சிவாலயங்கள் சிவாகமத்தின் வழி நிருமிக்கப்பட்டவை. அங்குப் பூசை விழா முதலிய அனைத்தையும் அவ்வாகம விதி வழாது நடைபெறுத்தும் அதிகாரம் முற்கூறியபடி ஆகம நூலைப் பதிவாக்கென விசுவசித்தொழுகும் சைவசமயிகளுக்குத்தான் உண்டு. அவரும் அவைகளை ஆகம விதியின்வழி நடைபெறுத்தமட்டும் அதிகாரம் பெற்றுள்ளார். ஆகமநூலின் வைத்த முறை ஆலயங்களை நடாத்துதற்கே முற்காலத்துச் சைவப் பெரியார் அவைகளின் வசத்தில் அளவிறந்த பொருட்செல்வத்தை வைத்துப் போயினார். ஆகையால், தமதறியாமையானும் பிறர் தூண்டுதலானும் உந்தப்பட்டு ஆகம விதிகளை எதிர்த்துப் பழையன கழிதல் புதியனபுகுதல் முதலிய எவ்வித மாறுதல்களையும் ஆலயங்களிற் கொண்டுவரச் சைவர்க்குத் தானும் அதிகாரம் இல்லை.

புதுமைகள் புத்திக்குப் பொருந்துவனபோலத் தோன்றினும் ஆகம விரோதமாயின் ஆலயங்களில் நுழைதல் கூடா. மாமூல் மாமூல் என்று வரும் வழக்கங்கள் ஆகம விதிக்கு அவிரோதமாயிருந்தால்மட்டும் அங்கீகரிக்கப்படும்; விரோதமாயின் அவைகளையொழித்தன்றி உண்ணுதல் உறங்குதல் முதலிய எவையும் ஆகமியர்க் கடா. விதிகளும் அதிகாரிகளும் இல்லாத புறம்போக்கு நிலயங்களிற்றான் இட்டமும் மாமூலும் நட்டமாடலாம். ஆலயங்களுக்கு விதிநூல் ஆகமம்; அதிகாரி ஆகமியர்.



சிவாலயங்களின் வசத்திலுள்ள பொருட் செல்வத்திற் பெரும்பகுதி முற்காலத்துச் சைவப் பெரியாரது உடைமையே. பிறசமயத்தவரும் பொருள் விட்டிருப்பதாகச் சில பல சரித்திரங்கள் காணப்படுகின்றன. அவை யுண்மையாயின் அவர் கொடுத்த பொருளெல்லாம் மிகச் சிறுபகுதியே. அப் பிற சமயத்தாரும் தாம்செய்த பொருளுபகாரமே காரணமாகச் சிவாலயங்கள் தமது இட்டப்படி அல்லது தமது சமயக்கோளின்படி நடைபெறுதல் வேண்டுமென்று விரும்பியு மிருப்பாரா? ஒருக்காலும் மாட்டார். தற்கால ஆங்கிலேய அரசினரே இதற்குச் சான்று. ஒருக்கால் விரும்பியிருப்பாரேயாமாயின் அக்காலத்துச் சைவப் பெருமக்கள் அப் பொருளுபகாரத்தை ஏற்றிருக்கவே மாட்டார்கள். ஆகையால், பொருளுபகரித்தோர் எத்தகையாராயினும் அவரெல்லாம் சிவாலயங்கள் சைவ சமய விதிநூலாகிய சிவாகம விதியின்வழி மிக்க சிறப்பாக நடைபெறுதல் வேண்டுமென்னும் நல்லெண்ண முடையவரே. அந் நன்னோக்கத்தை மறந்தோ, பிறிது காரணத்தாலோ 'சிவாலயங்களுக்குத் தமிழர் பொருளுபகரித்தார்: வடமொழியார் பொருளுபகரித்தார்' என்று பொதுப்படக் கூறிக்கொண்டு சைவ சமயிகளல்லாத பிறசமயத்தார் சைவ சமய நிலயங்களை அபகரிக்க எண்ணுவதும், அங்குத் தமது இட்டத்துக்கும் தமது சமயக்கோளுக்கும் இணங்கத் திருத்தங்கள் செய்ய முனைப்பதும் அநீதி, அநீதி.

நிற்க: தற்காலத்தில் சிவாலயங்கள் சிறிது சீர்கேடடைந்திருப்பது உண்மையே. சீர்கேடென்பதெல்லாம் ஆலயங்களில் ஆகம விதிக்கு மாறுபட்டு நடக்குங் காரியங்களேயாம். ஆகையால், ஆகமம் வல்ல சைவபண்டிதர்களே ஆலய காரியங்களை ஆகம விதிகளோடு ஒத்திட்டுப்பார்த்து விரோதமானவைகளை யொழிக்கவும், பிறழ்ந்தவைகளை யொழுங்குபடுத்தவும் வல்லராவார். இவர் செய்வதே திருத்தமாகும். இச் சீர்திருத்தத்தை அரசியல் வாதிகள் செய்யமாட்டுவார்களா? மொழிப்போர் செய்வோர் செய்யமாட்டுவார்களா? சாதிச் சண்டையிடுவோர் செய்யமாட்டுவார்களா? ஒவ்வொருவர் கவனமும், நடுநிலையும் தத்தமது குறிக்கோளில் சாய்ந்து கிடக்கும். அன்றியும், தத்தங் குறிக்கோள்கள் இறந்துபடாது நிலையுதற்பொருட்டு இவர்கள் தமது அரசியற் சிறுதெய்வத்துக்கும்,

மொழிச் சிறுதெய்வத்துக்கும், சாதிச் சிறுதெய்வத்துக்கும், வைதிகசைவம் என்னும் சமயதேனுவைப் பலியுமிட ஒருப்படுவர். அன்றியும், இவர்கள் கூட்டத்திலெல்லாம் பல சமயத்தாரும் கூடிக் குலாவுவர். இத்தகைய கந்தர்கூளக் கூட்டத்தார் கூடிச் சிவாலயங்களைத் திருத்துவதென்பது அபத்தமே. ஆனால், இக்காலத்தில் விரும்பப்படும் சீர்திருத்தங்களைச் சிவாகமம் வல்ல சைவபண்டிதர்களிடம் கலந்து விஷயங்களை நன்கு உணர்ந்து திருத்தியமைப்பதும், கால நிலையையும் சமய சமுதாய நலத்தையும் செவ்விதின் ஆராய்ந்து அவற்றிற்கு ஏற்பச் சிவாகமங்களோடு மாறுபடாதவற்றைச் செய்யவேண்டுவதும் இன்றியமையாதனவே.

ஆலயங்களில் எத்தகைய சீர்திருத்தஞ் செய்வதற்கும் உண்மையி லுரியார் வைதிக சைவரே யாதலின், இவ் வைதிக சைவர்கள் வேறு பல துறைகளி லிறங்கிப் பலபடப் பிரிந்து எப்படி யுழைக்கினும், ஆலய காரியங்களோடு சம்பந்திக்கும்போது வைதிக சைவ ராஜாங்க கௌரவமாகிய இடபக்கொடியின்கீழ் ஒன்றுசேர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவர்களே ஆகமத்தின் ஆட்சி ஆலயங்களில் கெட்டொழியாதவாறு அவைகளைச் சீர்பெற நடாத்தல் வேண்டும். அன்றுதான் இவர்கள் ஆண்மை யுடையராவர்.

சைவன்.

## காலவியல்பு.

சிவாலயங்களிலே ஒருகால பூசைதானும் சத்தியாதி சத்திபர்யந்தம் கிரமமாக நடப்பதில்லை. இருளன் மாடன் முதலிய பேய்களுக்கோ, கொடையும் மடையும் கொட்டும் முழக்கும் கோலாகலமாய் நடக்கின்றன. நவரச புஞ்சமான கந்தபுராணம் முதலிய தெய்வக்கதைகளிலே மனிதர்கட்கு ரஸிப்பு இல்லை; தில்லானா, டப்பா, கஜல், ஜாவளி, தொகையறா, தெம்மாங்கு முதலிய தந்தனப்பாட்டுகளில் ஈடுபாடு மிகுதி. போர் முகத்திலே அஞ்சாது எதிர்நின்று செஞ்சோற்றுக் கடன்கழிக்கும் வீரர்கள் தாம் அடைந்த வெற்றியைக் குறிப்பாலும் சொல்லமாட்டார்கள். யுத்தம் என்று அறைந்தபொழுதே 'பொன்னுந் தம்பிரானே,' என்பவர்கள் தமது வீரப் பிரதாபத்தை வாரி வீசுகிறார்கள். நற்குடியிலே பிறந்த பழஞ்செல்வர்களெல்லாம் நீறு பூத்த நெருப்பு என அடங்கியிருக்கிறார்கள்; புழுக்கைவேலை செய்கிறவர்கள் தாட்டோட்டுப் பேசி ஆரவாரம் செய்கிறார்கள். இந்தக் காலந்தான், அப்பா! பஞ்சபாண்டவரிலொருவரான தருமபுத்திரரும் அஞ்சிய கலிகாலம்.

வி. பொன்னம்பலம்.
(சமயஞானர்)

உ

### துறையூர், தமிழ்ப்புலவர் மாநாட்டில்
### தமிழ்ப் பெரும் புலவர்
### திரு. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் கூறிய
# வரவேற்புரை.

தாவா நல்லிசைத் தண்டமிழ்ப் புலவீர்! ஓவாத் தமிழ்ப்பற் றுடைய நற் செல்வீர்!

நுங்கள் வரவு தமிழ்மொழி வீறுபெற்றோங்கும் தகைசான்ற நல்வரவாகுக. நுங்கள் நாண்மீன்கள் என்றென்றும் நின்று நிலைபெறுவனவாக.

தொல்கேள்வித் துறைபோகிய நுண்மா ணுழைபுலமுடைய புலவர் பலர் இகலின்றிஒருங்குகூடி அளவளாவித் தமிழ்ச்சுவை நுகரும்இன்பத்தை நோக்கத் துறக்கவின்பம் இறப்பச் சிறிதென்ப. வானோர்க்குமரிய அச் செஞ்சொலின்பத்தை இன்று நீவிரெல்லாம் நுகர்ந்து ஏனோர்க்கு மளிக்குமாறு கூடியிருக்கும் இத்துறையூரைத் தமிழ்த் துறையூர், தவத்துறையூர் என்று போற்றுதல் தகும்! தகும்!!

அறிஞர்களே! ஒரு நாட்டின் நாகரிக வளர்ச்சியைப் புலப்படுத்துவனவற்றுள் முதன்மையானது அந்நாட்டு மொழிவளர்ச்சியா மென்பதனை யாரும் மறுக்கவியலாது. அந்நாட்டில் எக்காலத்தில் மொழிவளர்ச்சி தலைசிறந்து விளங்குகின்றதோ அக்காலத்து அந்நாடு பல்வகை நாகரிக மேம்பாடு முடையதாய்த் திகழ்தல் கண்கூடு. நமது தமிழ் நாட்டு வரலாற்றுடன் தமிழ்மொழி வளர்ச்சியை ஒத்து நோக்குங்கால் இவ்வுண்மை நன்கு தெளிவாம். சங்கங்களிருந்து தமிழாராய்ந்த நாளில், வேந்தர்களும் வள்ளல்களும் தமிழைப் போற்றிய நாளில், ஆடவரும் மகளிருமாகப் புலவர் ஆயிரவர் திகழ்ந்த நாளில், ஒப்பற்ற தீஞ்சுவைச் செழுந்தமிழ்ப் பாடல்களும் பனுவல்களும் தோன்றிப் பல்கிய நாளில், நமது தமிழகத்திலே மக்களெல்லாரும் அறிவும் ஆற்றலும் மிக்கு விளங்கினர்; வேளாண்மையும் வாணிகமும் பல்வகைக் கைத்தொழிலுமாகிய செல்வ வளர்ச்சித் துறைகளெல்லாம் சிறப்புடன் நிலவின; அரசியற்றுறையோ அறமெனத் திகழ்ந்தது; தமிழ் வேந்தர்களின் வீரமும் வண்மையும் முறைசெய்யுந் திறனும் வியந்து போற்றுதற்குரியனவாக இலங்கின. மொழி வளர்ச்சி சுருங்கியதென்றே, அன்றே நாடும் பீடழிந்து நின்றது. ஆகலின், நாட்டு வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் ஒன்றோடொன்று இயைபுடையனவாதல் ஒருதலை.

இப்பொழுது நமக்குள்ள பெருமையெல்லாம் நம் முன்னோரின் பெருமையேயாகும். அன்னோர் காடு கெடுத்துப் பண்படுத்திவைத்த விளைபுலங்களில் அவர்கள் அகழ்ந்து கரைகோலிவைத்த காவிரி முதலிய ஆறுகளும் ஏரிகளும் நீரினை யுதவ, விளையும் உணவினை யுண்டும், அவர்கள் போற்றிவளர்த் துதவிய தமிழினைப் பேசியும் வாழ்ந்து வருகின்றோம். அவர்கள் வரம்பிட்டு வைத்த வாழ்க்கை நெறிகளே அறிவும் முயற்சியும் இல்லேமாயினும் நம்மை வழிநடத்துவனவாக வுள்ளன. நாமாக உழந்து தேடியது யாதுளது? ஓரோவழி உயரிய பண்புகளும் செயல்களும் நம்மிடையே காணப்படின் அவையும் அம் முன்னோரின் வழிவந்தமையால் நமக்குக் கிடைத்த பேறுகளென்றே கூறுதல் பொருந்தும்.

இங்ஙனம் பல்லாற்றானும் நமது நிலை சுருங்கியதாயினும் இனிப் பெருகுதற்கு வழியில்லாது போகவில்லை. கீழ்நிலையின் வரம்புகண்ட நாம் இனி மேனிலையிற் றிரும்பாது வேறென் செய்வது? கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளோடு முற்றோன்றி மூத்த வீரக்குடியினர் வாழ்ந்தது எமது தமிழகம் என்பதனை எண்ணின், கரிகாலனும் செங்குட்டுவனும் நெடுஞ்செழியனும் முன்னான வீரமன்னர்கள் வீறுடனாண்டது எமது தமிழ்நாடென்பதனை உன்னின், நக்கீரர் கபிலர் வள்ளுவர் இளங்கோவடிகள் முதலாய நல்லிசைப் புலவர்கள் பல்லிசை நிறுத்தது எமது தண்டமிழ் நாடென்பதனை நினையின், அவை எமக்கு ஊக்கமும் உரனும் உண்டாக்காது போமா? ஆண்மை மிக்க வீரர் வழியில், அரசர் வழியில், வள்ளியோர் வழியில், தெள்ளியோர் வழியில் வந்தயாமோ அறிவு குன்றி, ஆண்மை குறைந்து, பீடிழந்து வாடி நிற்போம் என்னும் உணர்ச்சி எம்மை உயர் நெறிக்கண் உந்தாது சாமா? “இனி நாம் அழுங்கிக்கிடவோம்; நாடெங்கும் தமிழினை முழங்கச் செய்வோம்” என்றெழுமின்! தளரா ஊக்கமுடன் உழைமின்! நாமும் உயர்ந்தோம். நமது நாடும் உயர்ந்தது.

கல்விச் செல்வர்காள்!

தமிழ்ப் புலவரென்பார் தமிழகத்திலே ஓர் குறுகிய கூட்டத்தினரல்லர்; விரிந்த சிந்தையுடைப் பெருந்தக்கோர்கள் அன்னவரே யாவர். தமிழ்ப் புலவரின்றித் தமிழகம் என்பது யாண்டுளது? “யாம் தமிழரேம்; எமது பீடுடைத் தமிழகம், எம் வீறுடை முன்னோர்” என்று கூறிக்கொள்வதெல்லாம் தமிழ்ப் புலவர்களால் வந்த பேறல்லவோ? தம்முடைய பழைய பெரிய அறிவுச் செல்வங்களையெல்லாம் வழி வழியாகப் பாதுகாத்து வந்து நாட்டின் பெயரை நிலைநாட்டுவோர் புலவர் என்பதில் ஐயமுண்டோ? பண்டுதொட்டுப் புலமைசிறந்து விளங்கினோரெல்லாம் ஒரு நாழி யுண்டியின் பொருட்டுக் கற்றோரல்லர். திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும்,



குன்றமெறிந்த முருகவேளும் தமிழாராய்ந்ததனைப் பழங்கதையென ஒதுக்குவார் ஒதுக்குக. முக்குற்றமற்ற முனிவர்களும், முடிசார்ந்த மன்னர்களும் செந்தமிழ்ப் புலவர்களாய்த் திகழ்ந்தனரே. பாலைபாடிய பெருங்கடுங்கோ, கணைக்காலிரும்பொறை என்னும் சேர மன்னர்களும், நலங்கிள்ளி, கிள்ளிவளவன், நல்லுத்தரன், கோப்பெருஞ் சோழன் என்னும் சோழமன்னர்களும், ஆரியப் படைகடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், பூதப்பாண்டியன், அறிவுடைநம்பி, இளம்பெருவழுதி, நல்வழுதி, குறுவழுதி, உக்கிரப்பெருவழுதி என்னும் பாண்டிமன்னர்களும், பிறரும் சங்ககாலத்தே தம் உடலோம்புதற் பொருட்டோ தமிழ் கற்று நல்லிசைப் புலமை யெய்திச் சிறந்தனர்? இத்தகைய வேந்தர் பெருமக்களெல்லாம் புலவர் வரிசையிற் சேர்ந்திருப்பது தமிழ்ப் புலவர்கட்குப் பெருமிதம் பயப்பதொன்றாம். ஆனால், அரசர்களாலேயே புலமைக்குப் பெருமை யுண்டாயிற்றெனல் அமையாது. புலமையால் அவர்கள் பெருமை யெய்தியரெனக் கூறுதல் பெரிதும் பொருந்தும். நிலனாளுஞ் செல்வத்தினும் புலனாளுஞ் செல்வம் மேதக்கதேயாகும். புலவர்களுக்குள்ளே புலமைத் திறத்தாலன்றிப் பிறப்பு முதலிய வேறெவ்வகையாலும் பெருமை சிறுமையில்லை. முடியுடை வேந்தராயினும், வேட்டுவராயினும், பாணராயினும் புலவரென்ற வகையில் ஒரு நிகரானவரே. திருக்குறளென்னும் தெய்வத் தமிழ்மறையை “வந்திக்க சென்னி, வாய் வாழ்த்துக, நன்னெஞ்சம் சிந்திக்க, கேட்க செவி” என்று உள்ளமுருகிப் போற்றினவன் உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டி வேந்தனாவன். திருக்குறளை இங்ஙனம் போற்றினவன் அதனை யியற்றிய பெருநாவலராகிய வள்ளுவனாரையும் தெய்வமாக்க் கொண்டு பாவினனவன் என்பதில் இழுக்கென்னை? ஆகலின், தமிழ்ப் புலவரென்பார் யாவரும் ஓரினத்தவரென்பதனைக் கடைப்பிடிமின்.

> “கற்றவர்க்கும் நலநிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
> யுற்றவர்க்கும் வீரனென் றுயர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
> கொற்றவர்க்கும் உண்மையான கோதில்ஞான சரிதராம்
> நற்றவர்க்கும் ஒன்றுசாதி நன்மைதீமை யில்லையால்”

என்பது எங்கட்கு மறை மொழியாகும். உலகில் வேறெவ்வெவர் எவ்வளவு வேற்றுமை யுடையராய்த் தொலையினும் தொலைக. தமிழ்ப் புலவராகிய எங்கட்குள் எத்துணையும் வேற்றுமை யின்றெனச் சாற்றுமின்.

இனி, முன்னாளில் மூவேந்தரும் பிறரும் தமிழைப் புரந்தனர்; தமிழ்ப் புலவரைப் போற்றினர்; இந்நாளிலோ தமிழ்ப் புலவரும் பிறரால் நன்கு மதிக்கப் பெறவில்லையே என நீவிர் கூறுதலுங் கூடும். அங்ஙனம்

கூறுவதில் உண்மையின்றென யான் உரைக்கின்றிலேன். எனினும், ஒன்று கூறுவதுடையேன். தமிழ்ப் புலவர்கள் ஏனோர்பாலுள்ள இக்குறையினை எடுத்துரைப்பதைக் காட்டினும் தம்பாலுள்ள குறைகளை முந்துற அறிந்து களைதல் கடனாகும். பண்டை நாளிலே தமிழ்ப் புலவரென்றால் இலக்கிய விலக்கணங்களைத் துறைபோகக் கற்றுப் பல கலையிலும் வல்லுநராய்ப் புலத்துறை முற்றி விளங்கினர். வாய்மையும் அன்பும் மற்றும் பல குணங்களும் நிரம்பித் திகழ்ந்தனர். அங்ஙனமாகலின் அவர்களை நல்லிசைப் புலவர் என்றும், பொய்யா நாவினர் என்றும், சான்றோர் என்றும் யாவரும் போற்றுவாராயினர். வேந்தர்கள், வள்ளல்கள் முதலாயினார் அவர்கள்பால் மிகு மதிப்புடையராய் வரிசை பல வழங்கி மகிழ்வித்து வந்ததன்றி, அவர்களில் ஓரொருவரைத் தமக்குச் சிறந்த நட்பாளராகக் கொண்டு, அன்னோர் பாடும் சுவைமிக்க தமிழ்ப்பாக்களைக் கேட்டு இன்புற்று மகிழ்ந்தும், அறிவுறூஉக்களால் தம் பிழையினை யோர்ந்து திருந்தியும் வந்தனர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன், 'என் மாற்றரசைப் போரிலே தாக்கி முரசுடன் அவர்களைக் கைப்பற்றேனாயின், யான் இத்தன்மையனாகுக' என வஞ்சினங் கூறுமிடத்து,

"ஓங்கிய சிறப்பி னுயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் றலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர்பா டாது வரைகவென் னிலவரை"

என்று கூறியிருப்பதொன்றே அக்காலத்துப் புலவர்களிடத்து வேந்தர்கள் வைத்திருந்த எல்லையில்லாத பெருமதிப்பிற்குப் போதிய சான்றாம். உலகத்தோடு நிலைபெற்ற பலரும் புகழும் சிறப்பினையுடைய புலவர் என்று கூறும் அருமையைப் பாருங்கள். புலவர்கள் எனது நாட்டினைப் பாடாது விடுக என்பது அவன் கூறிய வஞ்சினமாயின், தன்மீதுள்ள வெறுப்பால் அவர்கள் அங்ஙனம் பாடாது விடுதலைத் தனக்கு எவ்வளவு இகழ்ச்சியாக அவன் கருதியிருத்தல் வேண்டுமென்பதனை ஓருங்கள். சேரமான் தகடூரெறிந்த பெருஞ்சேர விளம்பொறை என்ற அரசனைக் காணச் சென்ற மோசிகீரனார் என்ற புலவர் அவனது வீர முரசு நீராடச் சென்றிருந்த காலையில் அதனை வைத்தற்குரிய முரசு கட்டிலில் அறியாது எறித் துயின்றனர். அதனை வந்து கண்ணுற்றான் அரசன். தனது வழிபாட்டிற்குரிய சிறப்பினையுடைய முரசு வைக்குங் கட்டிலில் அவர் துயிலுவதைக் கண்டும் சிறிதும் வெகுளாது, தனது கையால் சாமரை கொண்டு அவருக்கு விசிறிக்கொண்டு நின்றான். துயிலினின்றெழுந்தபின், தாம் முரசு கட்டிலில் துயின்றதனையும், அரசன் விசிறினதையும் அறிந்த புலவர் மிகவியந்து



அவனைப் பாராட்டிப் பாடினர். அம் மன்னவன் புலவரிடத்து எத்துணை அன்பும் மதிப்பும் வைத்திருந் திருத்தல் வேண்டும்! இங்ஙனம் எத்தனையோ பல சான்றுகள் உள்ளன. இன்னும், பிற்காலத்திலிருந்த கம்பர் முதலான புலவர்களுக்கு வேந்தர்கள் சிவிகை சுமந்தது முதலிய வரலாறுகளும் கேட்கப்படுகின்றன. அவர்களுடைய புலமையின் பெருமை என்னை? நம்மை அவர்களோடு ஒப்பிடுதல் யாங்ஙனம்? இக்கால நிலையில்—படிப்படியாக நம் உரங்குன்றி வந்துள்ள நிலையில்—வேறு பல துறைகளில் கருத்தைச் செலுத்த வேண்டியுள்ள நிலையில், நாம் அவ்வளவு பெரும் புலமையடைதற்கு வாய்ப்பு இன்றேனும், தமிழ் இலக்கிய விலக்கணங்களில் ஓரளவாவது அழுத்தமான பயிற்சியைப் பெறுதல் நமக்குரிய கடனாகும் என்பதனை அறியற்பாலம். தமிழ்ப் புலவரென்போரை விடுத்து, ஏனையரை நோக்கியும் ஒன்று கூறுதல் வேண்டும். தமிழ் நூல்களில் ஒன்றையேனும் படியாத என் இளந் தோழர்களும், பிறரும் தங்கட்குத் தமிழில் அளவு கடந்த பற்றுள்ளதாகப் பலகாலும் பேசுவதை நாம் கேட்கின்றோம். அஃது உண்மையான பற்றாமா? தமிழ்நூல்களைக் கற்று அவற்றின் பயனை நுகர்வதன்றோ தமிழ்ப்பற்றுள்ளவர்க்குரிய முதற்கடன்? அங்ஙனமின்றித் 'தமிழ்—தமிழ்' என வானளாவக் கூச்சலிடுவதெல்லாம் ஏதோ வேறுபயன் கருதிய செயலாவதன்றி உண்மையான தமிழ்ப் பற்றாகாதென்பது ஒருதலை. கழிந்த நாட்களில் தமிழ் நூல் கற்பதற்கு இயலாது போயினும், இனி யாம் தமிழ் கற்பேம் என உறுதிகொண்டு நாடோறும் சிறிதேனும் பயின்று வருவரேல், அவரது தமிழ்ப்பற்றை யாம் பாராட்டுதல் பொருந்தும்.

இனி, "தன்னைத் தலையாகச் செய்வானும் தான்" என்றபடி, தமிழ்ப் புலவர்கள் தம்மை உயர்த்திக்கொள்வதற்கு அவர்கள் நல்ல கல்வி யுடையராதல் ஒன்றுமட்டும் போதாது. விரிந்த உள்ளமும் சிறந்த பண்புகளும் வேண்டும். பண்டைநாளிலிருந்த புலவர்கள் பரிசில் கருதி யாரையும் எங்ஙனமும் பாடினரென்று கூறுதல் பொருந்தாது. அவர்கள் தாம் குற்றமற்ற பண்புகளுடையவராய் இருந்ததோடு, வேந்தர்களாயினும் பிறராயினும் தவறுடையராகக் காணப்படின் சிறிதும் அஞ்சாது அவர்களை நெருங்கி அறிவு கொளுத்தியும் வந்தனர்.

"நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்"

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
குழவி கொள்பவரின் ஓம்புமதி"

"அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்

நட்டோ ரம்ம ருவண் நட்டோரே
நள்ளா தோரிவண் நள்ளா தோரே".

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெரும நின் செல்வம்
ஆற்றா மைநிற் போற்றா மையே"

"கொடியோர்த் தெறுதலும் செவ்வியோர்க் களித்தலும்
ஒடியா முறையின் மடிவிலை யாகி
நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை யென்போர்க் கின்னா கிலியர்"

"கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
... ... ... ... ... ...

வருபடை தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை தரூஉங் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும்
இயற்கை யல்லன செயற்கையிற் றோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் ஞாலம்"

"நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசன் கொற்றம்
அதனால், நமரெனக் கோல்கோ டாது
பிறரெனக் குணங்கொல் லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையும்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை யாகி இல்லோர் கையற
நீ,நீடு வாழிய நெடுந்தகை"

என்பன போல்வன வெல்லாம் புலவர்கள் அரசர்கட்கு எத்தகைய அறங்களை அறிவுறுத்தி வந்தன ரென்பதனைக் காட்டுகின்றன. சோழன் நலங்கிள்ளி யென்பானும் நெடுங்கிள்ளி என்பானும் ஒருவர்க்கொருவர் பகைஞராய்ப் போர் தொடுத்தகாலைக் கோவூர் கிழார் என்னும் புலவர் அவர்கட்கு அறிவு கொளுத்துமாறு பாடிய பாட்டுக்கள் அவரது அஞ்சாமையையும் உயர்குணத்தையும் புலப்படுத்துகின்றன.



ஒரு காலத்தே இளங்கண்டீரக்கோ இளவிச்சிக்கோ என்ற இரண்டு சிற்றரசர்கள் ஒருங்கு கூடியிருந்த விடத்திற் சென்ற பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் கண்டீரக்கோவைக் கை குலுக்கிச் சிறப்புச் செய்து விச்சிக்கோவை அங்ஙனஞ் செய்யாது விட்டனர். அது விச்சிக்கோவிற்கு சிறிது வருத்தத்தையுண்டாக்க, அவன் அதன் காரணத்தை உசாவினன். அதற்குப் புலவர் கூறிய விடையாவது, "தம் கணவர் சேய்மைக்கட் சென்றிருப்பின், பெண்டிரும் பாடிவந்தோர்க்குப் பரிசில் கொடுத்தனுப்பும் உயர் குடியிற் பிறந்த கண்டீரக்கோன் ஆகலின், யான் அவனைப் புல்லினேன். நீயும் வள்ளலாகிய நன்னன் வழியில் தோன்றியவனும், உயர்குண முடையவனும் ஆயினும், நும் முன்னோருள் ஒருவன் புலவர்கட்குக் கதவு அடைத்தானாதலின், நுங்கள் மலையை எம்மவர் யாரும் பாடாது விட்டனர்; ஆதலின் யானும் நின்னைத் தழுவிற்றிலேன்" என்பது. இதிலிருந்து ஓர் குடும்பத்தில் யாரேனும் தகாதசெயல் செய்யின் அக்குடும்பத்திலே தோன்றினார் எவரையுமே புலவர்கள் மதிப்பதில்லை என்பது புலனாகின்றது. பெண்பாற் புலவர்களும் அஞ்சாமையும், அருஞ்செயல் புரியும் ஆற்றலு முடையராயிருந்தன ரென்பதற்கு, அதியமானிட மிருந்து ஔவையார் தொண்டைமானுழைத் தூது சென்ற வரலாறு சான்றாம். அத்தகைய அஞ்சாமையும், அருந்திறலும், பெருந்தன்மையும் இற்றை நாளில் தமிழ்ப் புலவர்கட்கு வேண்டும். ஏதோ சிறிது பொருள் கிடைத்தாற் போது மென்று தம் நிலைமைக்குத் தகாவாறு பிறரைத் தொடர்ந்து அவர்கள் மனை வாயிலைப்பற்றிநின்று பெருமைகெட வொழுகுவது தமிழ்ப் புலவர்கட்குச் சிறிதும் அடாது. அத்தகைய இழிதகவு யாரிடமேனும் காணப்படின் அன்னாரைப் புலவர் கூட்டத்திற்குப் புறகு என நீவிர் ஒதுக்குதல் வேண்டும். சுருங்கச் சொல்லின், பிறரெல்லாம் தம்மிடம் மதிப்பு வைக்குமாறு நடந்து கொள்வது தமிழ்ப் புலவர் கடனாம். மற்றும் உலகநடை யறிதலும் இன்றியமையாதது.

"உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா ரறிவிலா தார்"

என்பது மெய்ம்மொழியன்றோ? உலகிலே நன் மக்களா யுள்ளாரின் நோக்கங்களும் கொள்கைகளும் நடை முறைகளும் எங்ஙனம் உள்ளன வென்பதை அறிந்து அவற்றிற்கேற்ப ஒழுகுதலே உலகத்தோடு பொருந்த வொழுகுதலாகும். தாம் எவ்வளவுதான் பழம் பனுவல்களில் அழுத்தமான பயிற்சியுடையராயினும் இக்காலத்து அறிவு ஆராய்ச்சித் துறைகளைப் புறக்கணித்திடுதல் சாலாது. பழைய நூல்களைப் புதிய முறையில் ஆராய்தலும், புது நூல்கள் எழுதலும் வேண்டும். இவ்வகையில் தமிழ்ப்புலவ

ரனைவரும் தமிழன்னைக்குப் பெரிதும் கடன்பட்டிருக்கின்றனர். முற்காலத்துப் புலவர்கள் தம் வாழ்க்கையைச் செம்மையுற நடத்துதற்குத் தமிழ்ப் புலமை யொன்றையே கருவியாகக் கொண்டிருந்தாரு மல்லர். அவர்கள் பலவகை வாணிகமும், பிற தொழில்களும் நடத்தி வந்தனரென்பது, அவர்கள் பெயருடன் வழங்கும் அறுவை வாணிகன், கூல வாணிகன், பண்ட வாணிகன், பொன் வாணிகன், வண்ணக்கன் என்பன முதலிய அடைமொழிகளால் விளங்குகின்றது. இந்நாளிலும் புலவர்கள் அத்தகைய வினை முயற்சிகளில் ஈடுபடுதல் வேண்டும்.

தண்டமிழ்ப் போற்றும் திண்டிறலுடையீர்!

இதுகாறும் தமிழ்ப் புலவர்கள் தம்மைத்தாமே உயர்த்திக் கொள்ளுதற்குரிய நெறிகள் சிலவற்றை எனது சிற்றறிவிற்குத் தோற்றியவாறு கூறினேன். விரிவஞ்சிக் கூறாது விட்டனவும் உள. இனி, அரசாங்கத்தினரும், பல்கலைக் கழகத்தாரும், நாட்டாண்மைக் கழகத்தினர் முதலிய நாட்டுச் செல்வர்களும் தமிழ்ப் புலவர்கட்கு ஆற்றவேண்டிய கடன்கள் பலவுள்ளன. அவற்றையெல்லாம் நான் இங்குக் கூற ஒருப்பட்டிலேன். என்னினும் அறிவின் மிக்க பலர் இக்கூட்டத்திலிருக்கின்றீர்கள். நீங்களெல்லீரும் கூடிச் சூழ்ந்து ஒருமித்துச் செய்யும் முடிபுகளை அரசாங்கத்தினர் முதலாயினோர்க்கு அறிவிப்பீர்களென்று நம்புகிறேன். ஒன்றுமட்டும் நான் குறிப்பிட விரும்புதலுடையேன். உயர்திறப் பள்ளிகளிலாக, கல்லூரிகளிலாக தமிழாசிரியராயுள்ளார் அங்குள்ள ஏனை யாசிரியன்மாருடன் எல்லா வகையினும் ஒத்த நிலையினராக வைக்கப்பெறவேண்டும். இப்பொழுது பல்கலைக் கழகத்தின் எந்த அவையினும் தமிழ்ப் புலவர்க்கென இடம் யாதுமில்லை. மக்கட்கு நாட்டின்பற்றும் மொழிப்பற்றும் வளர்ந்துவரும் இந்நாளில்--எல்லாக் கலைகளையும் தாய்மொழி வாயிலாகக் கற்பிக்க வேண்டுமென அறிஞர் பலரும் வற்புறுத்துகின்ற இந்நாளில், தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழ்ப் புலவர்க்கென இடமில்லாதிருப்பது பெருங்குறையாம். அது விரைவில் அகற்றப்படவேண்டும். வித்துவான் தேர்வில் வெற்றிபெறுவோர் பட்டம் பெறும் நாளில் ஆங்கிலப் பட்டதாரிகளோடொப்ப நிலையங்கி (Gown) தரித்துக்கொள்ள வேண்டுமென இவ்வாண்டு முதல் விதித்துள்ளார்கள். இவ்விதி இவர்களை நன்கு மதிக்கவேண்டுமென்னும் நன்னோக்கங்கொண்டியற்றப்பட்டதாயின், இவர்களும் பல்கலைக் கழக அவைகளின் அங்கத்தினர் பதவியை விரும்பி நிற்கவும், வாக்குரிமை அளிக்கவும் உரிமை தருதல்வேண்டும். நேற்று நடந்த சென்னைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில், சென்னை மாகாணக் கல்வியமைச்சராகிய பெருந்திருவாளர் திவான்பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து அவர்கட்கு நாட்டினிடத்தும் நாட்டு மொழியி



னிடத்தும் உள்ள பெரும்பற்றுத் தெள்ளிதின் விளங்குகிறது. பிறகலைகளை நாட்டுமொழி வாயிலாகக் கற்பிப்பதன் இன்றியமையாமையை அவர்கள் பலபடியாக வற்புறுத்தியுள்ளார்கள். அவர்கள் தமிழர் மகாநாட்டுத் தலைவராக இங்கே எழுந்தருளியிருப்பதை, நாம் கருதியன கைகூடுமென்பதற்கு அறிகுறியாகக் கொள்ளக்கடவோம். தமிழ் நாட்டின் செல்வத் தோன்றல்களுக்கும், நாட்டாண்மைக் கழகங்களின் தலைவர்கள் முதலாயினோர்க்கும் ஒன்று கூறுகின்றேன். நீங்கள் பண்டைநாளிற் புரவலர்கள் போலத் தமிழ்ப் புலவர்க்குப் பன்னூறாயிரம் பொன் பரிந்தளிக்கவேண்டுமெனவும், நாடும், ஊரும், நடைநவில் புரவியும், களிறும், தேரும் வரிசையின் வழங்க வேண்டுமெனவும் கேட்கின்றிலேன். நும்மின்மிக்காராக மதித்துப் போற்றவேண்டுமெனவும் கேட்கின்றிலேன். யான் கேட்பதெல்லாம் நீங்கள் அவர்களை அவமதியாதிருக்க வேண்டுமென்பதே. தமிழ்ப் புலவர்கள் யாதேனும் காரியமாகவோ காரியமின்றியோ நுங்களிடை வருவரேல் அவர்கட்கு இருக்கையளித்து முகமன் கூறுதலேனும் நீவிர் புரிதல் வேண்டும்.

அரும்பெறற் புலவர்களே! தமிழ்ப் பற்றுடைய பெரும்பெயர்ச் செல்வர்களே!! இம் மாநாட்டிற்கு நுங்களை வரவேற்கு முகத்தால் என் கருத்திற் றோன்றிய சிலவற்றை வெளியிட்டதனை நீங்கள் பொறுத்தருளல் வேண்டும். யான் கூறியவற்றில் பிழை யாவன வுளவேல் அவற்றை ஒதுக்கி விடவும், நீங்கள் கண்ட நல்லனவற்றைத் தெரிவிக்கவும் நுங்கட்குக் கடப்பாடுளது. யான் சோணாட்டின் குணபாலாகிய தஞ்சையைப் பிறப்பிடமாகவும், குடபாலாகிய திருச்சிராப்பள்ளியை வினையாற்றிடமாகவும் கொண்டிருப்பதும், இந்நாட்டிலுள்ள தமிழாசிரியருள்ளே ஆண்டினாற் பெரும்பாலும் முதுமையுற்றிருப்பதுமே நுங்களை வரவேற்கும் பேற்றினை எனக்கு அளிப்பனவாயின. புலவர்கள் மேன்மையுறவும், தமிழ்மொழி தழைக்கவும், நாடு நலம் பெற்றோங்கவும் இத்தகைய மாநாடுகள் கூடுவது இன்றியமையாததென்பதை அனைவரும் அறிவீர்கள். இக்கருத்தினைக் கொண்டே சில ஆண்டுகளின்முன் திருச்சிராப்பள்ளியிலுள்ள தமிழ்ப் பண்டிதர்கள் முன்னின்று மும்முறை 'தமிழ்ப் பண்டிதர் மாநாடு' நடாத்தினோம். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள தமிழ்ப் பண்டிதர்கள் அக்கூட்டங்கட்கு வந்து சிறப்பித்தார்கள். அப்பொழுது சென்னை வளர்நெறி அமைச்சராயிருந்த பெருந்திருவாளர் திவான்பகதூர் சர். T. N. சிவஞானம் பிள்ளை அவர்களும் ஓர் கூட்டத்திற்குத் தலைவராக வந்திருந்தனர். தமிழ் மக்கள் அனைவரும் இரங்குமாறு நம்மை நீத்தகன்ற திருமிக்க பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் அம்மாநாடுகட்கு உறுதுணையாக நின்று கடனாற்றினர். திருவாளர் தி. மூ. நாராயணசாமி பிள்ளையவர்களும் அதற்கு ஆதரவாக இருந்

தமையை இங்கே மகிழ்ச்சியுடன் குறிப்பிடுதல்வேண்டும். இப்பொழுது இத்தகைய கூட்டங்களில் நம்மை உட்படுத்தி இயக்கிக் கொண்டிருக்கிற ஒரு பேராற்றல் நம்மில் ஒருவராக உருக்கொண்டு கரந்தையம்பதியினின்று இங்கு வந்திருத்தலை எல்லீரும் அறிவீர்கள். அது நல்லுடம்புடன் பல்லாண்டு வாழவேண்டுமென வாழ்த்துவதன்றி நாம் செய்யற்பாலது யாது? இப்பொழுது தமிழர் மகாநாட்டிற்கும், தமிழ் மாணவர் மகாநாட்டிற்கும் வாய்த்தமைபோலவே தமிழ்ப்புலவர் மகா நாட்டிற்கும் இருபெருந்தக்கார்கள் திறப்பாளராகவும், அவைத் தலைவராகவும் வாய்த்திருப்பது நமது பெரும் பேறாகும். திறப்பாளராகிய திருவாளர் பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களின் புலமை மாண்பினை வியந்து புகழாதார் யாருமிரார் என்பது தேற்றம். தென்மொழி வடமொழி என்னும் இருமொழிப் புலமையும் ஒருங்குடைய நமது பண்டிதமணியார் நாடோறும் அரிய நூல்களை ஆராய்ந்து நுண்பொருள் கண்டு அவ்வின்பத்தில் திளைத்தலையே பொழுதுபோக்காகக் கொண்டுள்ள பெருவாழ்வுடையவர்.

தலைவராகிய திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரவர்களைத் தமிழ் நாட்டிலுள்ள ஐயாட்டைச் சிறுவர் சிறுமியர் முதலாக முதுக்குறைவுடைய பெரியோர்காறும் யாவரும் அறிவர். அவர் "நல்லாசிரியற்கும்" ஆசிரியர்; பலதிறத்து மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும், புலவர்கட்கும், நூல்கள் எழுதியும், பதிப்பித்தும் வெளியிடும் பேருதவியாளர்; சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடித்தருவதில் முனைந்து நிற்கும் மூதறிஞர்; தமிழ்ப் புலவர்கள் பெருமிதத்துடன் வாழவேண்டுமென்பதற்கு எடுத்துக் காட்டாக நிற்கும் பீடுடையார்; அவரைக்குறித்து இன்னும் கூறுவேனாயின், நீவிர் யார் கூறுதற்கு, யாம் அறியோமா? என நீங்கள் என்மேற் சீற்றங் கொள்ளுதலுங் கூடும்.

புலவர் பெருமக்களே! நுங்கள் எல்லோரையும் மனமுவந்து வரவேற்கின்றேன்; வாழ்த்துகின்றேன். அங்ஙனமே, திறப்பாளரும், தலைவருமாகிய இருபெரியார்களையும் வரவேற்கின்றேன்; வாழ்த்துகின்றேன். அவர்கள் தங்கள் பணியை உளமுவந்தேற்று ஆற்றுமாறு நுங்கள் சார்பாக வேண்டிக் கொள்கின்றேன். நல்வரவு! நல்வரவு!! வாழ்க! வாழ்க!!

வாழி தமிழ்மொழி, வாழி தமிழகம்
வாழி தமிழர்கள், வாழி புலவரே.

---

உ

# விநாயகரிடத்திற் குட்டிக்கொள்ளுதல்.

## II

[சென்னை திருவல்லிக்கேணி திரு. நல். கண்ணப்பமுதலியார்]

---

சுரர்கு லாதிபன் றூய்மலர் நந்தனம்
பெருக வார்கடற் பெய்த வயிற்றினேன்
கரக நீரைக் கவிழ்த்த மதகரி
சரண நாளுந் தலைக்கணி யாக்குவாம்.

பல புவனங்கடந்த அண்டக் குழுவினுக்கெல்லாம் மன்னாகி வீற்றிருந்த வீரனும் தீரனுமாகிய சூரபத்மாவின் கொடுங்கோற்கஞ்சி தேவேந்திரன் இந்திராணியோடும் விண்ணுலகத்தைவிட்டு இம்மண்ணுலகில் அளவற்ற மகிமையுற்றிருக்கின்ற சீகாழிப் பதியை யடைந்து சிவபெருமானை யருச்சித்தற்கோர் நந்தனவனம் வைத்துத் தினந்தோறும் பத்திரபுட்பங்களைக் கொய்து அருச்சித்து வாழ்கின்ற நாளையில், அந்தச் சூரபத்மனுடைய ஆக்ஞையால் மேகங்கள் சிறிதும் மழைபெய்யாமல் மாற, அதனால் அந்த நந்தனவனமானது வாடியிருந்தது. பின்னர், இந்திரன் அதனைக் காணுந்தோறும் வருந்தி ஏங்கித் துயருற்றிருக்குஞ் சமயத்தில், சிவபெருமான் கிருபையால் ஒரு வாக்கானது, 'நதி வந்து நினது நந்தனவனத்திற்பாயும்; அஞ்சாது பூசைசெய்' என்று ஆகாயத்தின்கணுண்டாயது. அதனை இந்திரன் கேட்டு மனமகிழ்வுற்றிருக்கின்றபோது, அவனிடத்து நாரதமுனிவர் வர, அவரை இந்திரன் பணிந்தெழுந்து சுவாமி! 'சூரபத்மன் கொடுமைக்கஞ்சி மிகுந்த மனக்கவலையோடு மிப்பதியில் வந்தொளித்திருக்கின்ற யான் அக்கவலை தீரும் வண்ணம் சிவபெருமானுடைய திருவடிகளை யருச்சிப்பதற்கு ஓர் நந்தனவனம் வைத்தேன்; அது மழையில்லாமல் வாடிப்போனதன்றி அதிலுள்ள மலர் தளிர் அரும்பு முதலானவைகள் கணவனை நீங்கிய கற்பின் மகளிரைப்போலாயின. ஆதலால், இனி அதற்குச் சலம் பாயத்தக்க உபாயத்தினை புணர்த்தியருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, நாரதமுனிவர் மனமிரங்கி இந்திரனே! கைலாயவரையிலிருந்த காவேரி நதியை முன்னர் சிவபிரான் அகத்திய முனிவருக்களித்

திருக்கின்றனர். அதனை யம்முனிவர் தமது கமண்டலத்திலடைத்துச் சையவரைச் சாரலில் வந்திருக்கின்றனர். அந்நதி பெருகுமாயின் உனது நந்தனவனம் பிழைக்கும்? அது பாயும்படி செய்யவல்லவர் விநாயகமூர்த்தி யொருவரேயன்றி வேறொருவரில்லை; ஒன்றையாக்கவும், ஒன்றையழிக்கவும், ஒன்றைவிட வொன்றை யுயர்த்தவும் செய்யவல்லவரவரேயாகும். ஆதலால், விரைவில் அவருடைய திருவடிகளை வழிபடக் கடவையென்று சொல்லிச் சென்றனர். இப்பாலிந்திரனவன் விநாயகமூர்த்தியைப் பூசித்து அவருடைய திருவடித் தாமரைகளை அநந்தமுறை வேதாகமங்களாற் றுதிசெய்து நிற்க, கணேசமூர்த்தி கிருபை சுரந்து, இந்திரா! 'நீ யாது வேண்டினை?' யென்று திருவாய் மலர்ந்தனர். இந்திரன் மீட்டுந் தொழுதெழுந்து சுவாமி! அடியேன் சிவபெருமானைப் பூசிக்குமாறு ஓர் நந்தனவனம் வைத்தேன். அது மழையின்றி வாடுகிறது. அகத்திய முனிவர் சையவரைச் சாரலில் வந்திருக்கின்றனர். அவர் தமது கமண்டலத்திலடைத்து வைத்திருக்கின்ற காவேரி நதியை உலகமெல்லாம் போற்றும்படியாக இங்குவரச் செய்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனன். அதற்குக் கணேசமூர்த்தி அவ்வாறே செய்வோமென்று விடைகொடுத்து உடனே காகவடிவங்கொண்டு சையவரைச் சாரலையடைந்து அகத்திய முனிவருடைய கமண்டலத்தின்மீ தூட்கார்ந்தனர். அதை யம்முனிவர் கண்டு, இனிவரும் விளைவை யோசியாது தமது கையாலோட்ட, உடனே அக்கமண்டல நீரைக் கவிழ்த்து, அக்காக வடிவத்தினின்றும் மாறிப் பிராமணப் பிள்ளை வடிவங்கொண்டு நின்றனர். அவ்வாறு நிற்பவரை அகத்திய முனிவர் பார்த்து இவன் முன்னங் காக வடிவோடு நமது கரக நீரைக் கவிழ்த்து இப்போது பிராமணப்பிள்ளை வடிவாகி நிற்கின்றானாதலால், இவன் அநுமானோ, அசுரனோ வென்று சந்தேகித்து, இவன் திறத்தை முழுவது மறிவோமென்றெண்ணி அவரைக் குட்டுமாறு தமது விரல்களை மடித்து ஓங்கிக்கொண்டு அவரருகிற் சென்றனர். அதற்கு விநாயகமூர்த்தி பயந்தவர்போல ஓட, மீட்டுமவரைப் பிடிப்பதற்கு அகத்தியர் பின்பற்றி ஓடினர். இப்பால் விநாயகமூர்த்தி அம்முனிவருக் ககப்படுவார்போலக் கிட்டியும், பின்னரகப்படாமல் அவ்வளவு தூரத்திலே யெட்டியும், இவ்வாறு அகத்தியர் தொடர்ந்து வருந்தோறும் விட்டுவிட்டகன்று உலகமெல்லாந்



திரிந்து ஓட்டங்காட்ட, அதனால் அகத்தியமுனிவர் தமதுள்ளமுங் கால்களுந் தளர்வெய்தினர். அதனைக் கணேசமூர்த்தி யறிந்து பிராமணப்பிள்ளை வடிவத்தை மாற்றி யானைமுகத்தோடுந் தோன்றினர். அவரைக் கண்டவுடன் அகத்திய முனிவர் திகைத்து அன்பும் அச்சமுங்கொண்டு சாஷ்டாங்கமாகப் பணிந்தெழுந்து, முன்னங் குட்டுதற் கோங்கிய கரத்தினால் தமது சிரத்தில் உதிரங் குழம்பும்படியாகக் குட்டிக்கொண்டனர். அவ்வன்புக்கு விநாயகமூர்த்தி கிருபை சுரந்து ஓ! தமிழ்முனியே! நீ செய்யும் செய்கைக்கு மெச்சினோம். இனி யதனை நிறுத்தி உனக்கு வேண்டிய வரங்களைக் கேளென்று திருவாய்மலர்ந்தனர். முனிவர் மீட்டுந் தொழுதெழுந்து சுவாமி! தேவரீர் திருவிளையாடல்கள் என்னா லறியப்படுவனவோ? சிவபெருமானாற் பெற்று கமண்டலத்திலடைத்து வைத்திருந்த காவிரி நீரைச் சிறிதுமில்லாதபடி தேவரீர் கவிழ்த்துவிட்டது யாது காரணம்? அறிகிலேன். அடியேன் சிவபிரான் உத்தரவின்படி இப்போது பொதியமலைக்குச் செல்கின்றேன். அங்கு அவரை அபிடேகிக்குமாறு அக்காவிரி நதியைக் கடாக்ஷித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்தனர். அதற்கு விநாயகமூர்த்தி மனமிரங்கி, ஓ! குறுமுனிவ! இந்திரன் சிவபிரானுக்கு அருச்சனை செய்யுமாறு ஓர் நந்தனவனம் வைத்தனன். அது மழையின்றி வாடுதலால் அதனைக் காப்பாற்றவேண்டி நினது கமண்டல நீரைக் கவிழ்த்தனம். இனி யுனது கமண்டலத்தை நிரப்பித் தருகிறோம் என்று திருவாய் மலர்ந்து மிக்க விரைவோடு பாய்ந்து செல்லுகின்ற அக்காவிரியின் சலத்தைத் தமது கரத்தினாலன்றி அக்கமண்டலத்தில் வழியும்படியாக விடுத்துக்கொடுத்து பின்னுமளவற்ற வரங்களையுந் தந்து கரந்தருளினர்.

எந்த மூர்த்தியிடத்திலுங் காணப்படாத குட்டிக்கொள்ளும் விஷயம், விநாயகப் பெருமானிடத்தில் முதன்முதல் இராவணனும், அகஸ்தியரும் செய்துவந்த வழக்கமேயாம்.

நடையூறு சொன்மடந்தை நல்குவதும் நம்மேல்
இடையூறு நீங்குவது மெல்லாம்—புடையூறுஞ்
சேனைமுகத் தாளிரியச் சீறுமுகத் தூறுமதத்
தானைமுகத் தானைநினைத் தால்.

---

186920

௨

# ஓர் உபந்நியாசம்.

திருச்சியில் சுதேசக் காட்சியொன்று முனிசிபல் நாடகக் கொட்டகையில் 2—9—32 முதல் 15—9—32 முடிய நடைபெற்றது. அதுசமயம் அகில இந்திய சுதேச பொருட்காட்சியை ஆதரிக்கும்படி சேலம் ஸ்ரீமான் ஸி. இராஜகோபாலாச்சாரியார் அவர்கள் பிரசங்கமொன்று செய்தார். அவர் தம் பிரசங்கத்தில் சொன்னதாவது:— நான் சுதேசி விஷயமாய் மாத்திரம் பேச ஒப்புக்கொண்டிருக்கிறேன். அது கஷ்டம். ஒரு கம்பி, கயிறுகட்டி ஒருவன் அதன்பேரில் நடப்பதுபோல் இருக்கிறது. கோலைப்பிடித்துத்தான் நடக்கவேண்டும். இந்தப்பக்கம் அல்லது அந்தப் பக்கம் விழாமல் ஜாக்கிரதையாக நடக்கவேண்டும். நான் சுதேசி காட்சி அதாவது சுதேசியத்தின் நன்மையைப்பற்றிப் பேசினால் அது விதேசி தீமையைப்பற்றியதேயாகும். அதை விளக்கினால் ராஜீயம் முழுவதும் அதில் சேருகிறது. ஆனால், நான் இருபுறமும் விழாமல் கம்பிமேல் நடப்பவன்போல் சுதேசியைப்பற்றியே பேசுகிறேன். நம் தேசத்தின் சாமான்களையே வாங்கி உபயோகிப்பதுதான் சுதேசியம். அதனால் நன்மைக்குக் கணக்கேயில்லை. அப்படிச் செய்யாவிடில் தீமைக்கு அளவில்லை. உடம்பின் பிரயோஜனம் ஆரோக்கியம் ஏதாவது உபாதி வந்தால்தான் தெரியும். சுதேசியை ஆதரிப்பதில் மிகுந்த சௌகரியங்கள் உண்டு. கோடிக்கணக்கான பணம் நம் நாட்டிலிருந்து அயல்நாடுகளுக்குப் போகிறது.

முதலில் உணவுப்பொருள்களை எடுத்துக்கொண்டால் பல 100-ல் 99 ரூபாய் நம் நாட்டில் தான் செலவாகிறது என்று நினைக்கலாம். சுதேசியம் இல்லாத சாமான்கள் பத்திரிகையில் பெரிய எழுத்தில் போட்டு மனதைக் கவர்ந்தன. பெரிய எழுத்தில் அச்சில் போட்டிருப்பது நிஜமென்று பாமரஜனங்கள் நம்புகிறார்கள். பலவகையான டப்பிப்பால், பிஸ்கோத்துகள், பிராண்டி முதலிய சாமான்களின் விளம்பரத்தை நம்பி விதேசி சாப்பாட்டுச் சாமான்களை உபயோகித்து நம் ஜனங்கள் ஏமாந்து போகிறார்கள். எல்லோருக்கும் தாய்ப்பாலுக்கு இரண்டாவது பசுவின்பால்என்று தெரியும். அது தேகத்திற்கு ஆரோக்கியம். அதையறியாமல் ஜனங்கள் பத்திரிகைகளில் கொட்டை எழுத்தை நம்பி எத்தனை மாதம் முன் கறந்த பாலோ எத்தனை மாதம் டப்பியில் அடைத்துவைத்து எத்தனை மாதம் கடையில் வைத்திருந்த டப்பிப்பாலோ குழந்தைகளுக்குப் போடுகிறார்கள். பிஸ்கோத் சாக்லேட், [illegible] மாவு வருஷத்திற்கு மூன்றுகோடி வரவழைக்கிறோம். [illegible] உணவுப்பொருள்கள் மாத்திரம் ஐந்துகோடி ரூபாய்க்கு தருவித்துவருகிறோம்.



பழ வகையராவில், நம் நாட்டில் பழமா இல்லை? 1931-ம் வருஷத்தில் ஒன்றரைக்கோடிக்கு வெளிநாட்டுப் பழங்கள் வாங்கியிருக்கிறோம். நம் நாட்டில் மிகவும் புதிதும் ஆரோக்கியமுமான பொருள்கள் இருக்க, அநாரோக்கியமான சாமான்களுக்கு சுமார் 10 கோடி வரையில் உணவுப் பொருள்களிலேயே செலவிடுகிறோம். நம் நாட்டில் உணவுப் பொருள் கிடையாதா? அரிசி, கோதுமை மாவு இங்கே செய்யக்கூடாதா? மாவு கூட அயல்நாட்டு மாவு தோசைக்கு உபயோகப்படுத்துகிறோம். இந்தியாவிற்கு நஷ்டமாவது மாத்திரமல்ல; நம் பொருளாதார நிலைமையில் இப்படி விதேசி உணவுப்பொருள்கள்கூட வாங்க நாம் அருகரா என்று யோசிக்கவேண்டும். பிஸ்கோத் கூட வடஇந்தியாவில் இருந்து வருவதை விட அந்தந்த ஊரிலேயே செய்ய ஏற்பாடு செய்தால் சூடாக வீட்டிலேயே தினமும் கொண்டுவந்து கொடுக்கலாம். எதற்கும் அந்நிய நாட்டிற்கு நாம் உணவுப்பொருள்கள் விஷயத்தில் போகவேண்டியதில்லை.

இரண்டாவது சோப் விஷயமாக இந்த நாட்டில் மிகவும் அருமையான வாசனையுடனாவது இல்லாமலாவது செய்கிறார்கள். நான் பெயர் குறிப்பிட்டால் ஒரு கம்பெனியாரை துதிசெய்தாற்போலாகும். மற்ற கம்பெனியார் நிந்திப்பர். நான் நல்ல இந்திய சோப்தான் உபயோகிக்கிறேன். இது விஷயமாக வெளிநாட்டிற்கு ஒன்றரைக்கோடி ரூபாய் போகிறது.

குழந்தை விளையாட்டுச் சாமான்களில் 50-லக்ஷம் அல்லது அரைக் கோடி ரூபாய் வருஷாவருஷம் வெளிநாட்டிற்குப் போகிறது. ஓலையாலும், சட்டி முதலான மண்பாத்திரத்தாலும், புளியங்கொட்டையாலும் விளையாட்டுச் சாமான்கள் செய்ய நமக்குத் தெரியாதா? வேண்டுமானால் புதுச் சாமான்கள் செய்யலாம்.

புகையிலை, சுருட்டு, சிகரெட் விஷயத்திலும் பல கம்பெனிகள் இந்தியாவிலேயே செய்தாலும் பொருள், யந்திரம், காகிதம் எல்லாம் வெளிநாடுகளிலிருந்து வந்ததேயாகும். ஆனால், சர்க்கார் இறக்குமதி வரி மாத்திரம் தப்பிக்கொள்கிறது. புகை பிடிக்கும் வழக்கம் விடமுடியாமல் போய்விட்டால் உன் நாட்டில் செய்யும் பீடி குடிக்கலாம். அதில் எல்லாப் பொருளும் இலை, நூல், வேலை செய்பவர் எல்லாம் நம் நாட்டினரே. சிகரெட்டில் மாத்திரம் வருஷத்திற்கு ஒன்றரைக்கோடி ரூபாய் வெளிநாட்டிற்குப் போகிறது. அது நிறுத்தினால் ஆரோக்கியம். பீடி பிடித்தால் நம் தேசத்திலேயே பணம் நிற்கிறது.

எல்லாவற்றிலும் துணிதான் பெரிய இனம். போனவருஷம் 20 கோடி ரூபாய் ஜவுளி தருவித்திருக்கிறோம். அதற்கு முன்வருஷங்களில் 40, 50 கோடிக்கு வரவழைத்து வந்தோம். இது குறைந்ததற்குக் கார

ணம் நம் பூர்ண நிஷ்கரிஷைதான். நாம் விதேசித் துணியைத் தொடாமலே இருந்தால் இந்தியாவிற்கு இந்த 40, 50 கோடி மிஞ்சும். போன வருஷத்தில் வெளிநாட்டுத் துணி வராமல் கிளர்ச்சிசெய்து தடுத்ததன் பயனாக இவ்வளவு தூரம் குறைந்தது. இந்த விஷயத்தில் கட்சிபேதமே கிடையாது. இது காங்கிரஸ் பிரசாரம் என்று பலர் சொன்னால், உண்மை பேசவேண்டும் என்பதும்தான் காங்கிரஸ் பிரசாரம். அதற்காக மற்றவர் உண்மை பேசக்கூடாதா என்று கேட்கலாம். எப்பேர்ப்பட்டவரும் நம் தேசத் துணி உடுக்கவேண்டும். ஜாதிப்பிரிவினை இந்த விஷயத்தில் புகுத்தக்கூடாது. சுதேசி என்பது காங்கிரஸ் ஜாதியினரது தனிக்கொள்கையல்ல. அதுபோலவே மதுவிலக்கு. இந்த இரண்டு பிரசாரமும் காங்கிரஸ்காரர்தான் செய்யவேண்டும் என்பது தவறு. தேசக்ஷேமத்தைக் கருதியவர் யாவருமே இதில் ஈடுபடவேண்டும்.

சென்ற வருஷத்தில் பல சபைகள் ஏற்படுத்தப்பட்டு "இந்திய சாமான் வாங்கும்" லீக்குகள், சுதேசி சங்கங்கள், கவர்ன்மெண்டார் எவ்வளவு நிபந்தனைகள் ஏற்படுத்தியபோதிலும் மிகவும் தீவிரமாக வேலைசெய்ததைப் பாராட்டுகிறேன். நாம் பார்க்கவேண்டியது என்னவெனில், அயல் நாட்டுச் சாமானைவிட நம் நாட்டுச் சாமான் நன்றாக இல்லாவிடினும் சுதேசி சாமான் கிடைக்கும் பக்ஷத்தில் அதையே வாங்கவேண்டும். துணி வாங்குவதில் (1) கதர் முதன்மையாக வாங்கவேண்டும். அதில் நூல், தறி, தறி செய்யும் கட்டை, ராட்டைக்கட்டைமுதல் பூர்ண சுதேசிய சாமான்கள். ரூபாயில் 16 அணாவும் சுதேசி சாமான் சேர்ந்தவை. (2) நாட்டுக் கைத்தறியில் செய்த துணி. இதில் பஞ்சு மிகவும் மெல்லியதாயிருந்தால் அன்னிய நாட்டினது. இதை வாங்கினால் ரூபாயில் நான்கு அணா சுதேசி. (3) வெளி மாகாணத்தில் தயாரிக்கும் மில் துணி. இது பூராவும் யந்திரத்தினால் செய்யப்பட்டு வருகிறது. (4) சீமைத் துணி.

கதர் உடுத்தினால் ஒரு தைரியமும் மன உற்சாகமும் ஏற்படுகிறது. விதேசித் துணிகள் கட்டினால் தைரியம்போய் அதைரியமும் பயமும் மேற்கொள்கிறது. நமது மில்களில் ஆண், பெண், குழந்தைகள் அடிமைவேலை செய்கிறார்கள். ஒரு மில்போய் பார்த்தால் பிற்பாடு பிரசங்கம் வேண்டியதில்லை. எல்லாருமே கதர் வாங்குவர். ராட்டை தறி மேன்மை ஏற்படுகிறது, நமது பணம் எல்லாருக்கும் உபயோகப்படுவதால்தான். இந்த நாட்டில் வேலையில்லாமல் ஆயிரக் கணக்கான மக்களிருக்க, தேசம் முழுவதுமே நான்கு மாதம், ஆறுமாதம் வேலையில்லாமல் தவிக்கும்போது சுதேசியை ஆதரித்தால் நம் நாட்டினருக்கும் போதிய வேலை தரும். அயல்நாட்டுச் சாமான் உபயோகித்தால் வேலையில்லாத் திண்டாட்டம் நம்மைவிடாது. 30 கோடி ஜனங்கள் இந்தியாவிலிருந்தும் நம் துணி நாமே செய்துகொள்ளாமல் அயல்நாட்டை எதிர்பார்த்தால் நம்மைவிட கேவலமான நாடு எதுவுமில்லை. 1816-ம் வருஷத்தில் ஒரு கஜம் துணிகூட இந்தியாவிற்குள் வரவில்லை. 100 வருஷத்திற்குள் இந்த கதியாகி விட்டது. எல்லாம் தறியிலேயே நெசவு. ஒரு மில் கிடையாது. இவ்வளவு துணி கைராட்டையில் உண்டானது என்றால் இன்னும் போட்டி இருந்தும் லக்ஷக்கணக்கான கஜ துணி செய்யப்பட்டு வந்திருப்பதால் இந்தத் தொழிலை நாம் காப்பாற்ற வேண்டியது அவசியமல்லவா? அவசரமாகத் தீர்மானம்செய்து மில் துணி பலர் வாங்குவார்கள். உண்மையில் ஒரு கதர் துணி வாங்கினால் ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுகிறோம். அந்நியத் துணிவாங்கினால் ஒரு பாவம் செய்கிறோம். சுதேசியினால் ஒரு குடும்பத்திற்கு தர்மம் செய்வதாக நினைத்து ஆதரிக்கவேண்டும்.



அன்னியநாட்டுத் துணியில் இன்னும் 20 கோடி செலவழித்துவருகிறோம். இதையும் நிறுத்தவேண்டும். 1930-ம் வருஷத்தில் மல்வகையரா 50 கோடிவந்தது. 1931-ம் வருஷத்தில் 20 கோடிதான் வந்தது. அதே மாதிரி நூல் 1930-ம் வருஷத்தில் நான்கரைக்கோடி ராத்தல் வந்தது. 1931-ம் வருஷத்தில் மூன்றுகோடி ராத்தல்தான் வந்தது. கோராமல் 1930-ம் வருஷத்தில் 153 கோடி கஜம். 1931-ம் வருஷத்தில் 36 கோடி கஜம் வந்தது. சலவை செய்த துணி 1930-ம் வருஷம் 79 கோடியும், 1931-ம் வருஷத்தில் 27 கோடியுந்தான் வந்தது. மொத்தம் துணி வகையராவில் 1930-ம் வருஷத்தில் 72 கோடி வாங்கியிருக்க, 1931-ம் வருஷத்தில் 34 கோடிதான் வந்தது. சுதேசி இயக்கம் பரவினால் இந்த 34 கோடியும் 15 கோடியாக்கலாம். கரைபோட்ட துணி 1930-ம் வருஷத்தில் 57 கோடி கஜம் வந்திருக்க, 1931-ம் வருஷத்தில் 20 கோடி கஜம் வந்திருக்கிறது. இன்னும் இவ்வளவு அயல் நாட்டிற்குப் போகிறதைக் குறித்து விசனப்படவேண்டியதாயிருக்கிறது.

மாணவர்கள் எல்லோரும் சுதேசி இயக்கம் நாட்டில்பரவி நமது மக்களுக்கு வேலைகொடுக்கத் தொண்டுபுரிய முன்வரவேண்டும். தங்கள் சிநேகிதர்களையும் தெரிந்தவர்களையும் சுதேசித் துணிவாங்க வற்புறுத்தவேண்டும். பிரதிதினமும் ஒரு மணிநேரம் இந்தத் தொண்டில் ஈடுபடவேண்டும். நீங்களும் கதர் அணிந்தால்தான் பிரசாரம் செய்வதில் பலனுண்டு. இல்லாவிடில் உங்கள் பிரசாரம் யாரும் கேட்கமாட்டார்கள். இம்மாதிரி ஆறுமாதம் தீவிரமாகப் பிரசாரம் செய்தால் நாடு எங்கும் சுதேசிப்பேச்சு ஏற்பட்டு தேசம் க்ஷேமமடையும் என்றார்.

ஸ்ரீமான் ஆச்சாரியார் அவர்கள் சொல்லியபடி நாட்டிலுள்ள மக்கள் யாவரும் நம் நாட்டு உடையை ஆதரித்து, கோடிக்கணக்கான பணம் நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குப் போகாமல் பார்த்துக்கொள்வதோடு, அமையாமல் நம்நாட்டிலுள்ள ஏழைமக்களைக் காப்பாற்றினவர்களாவோம்.

———

"யதார்த்தவசனி"

உ

துறையூரிற் கூடிய தமிழ்ப்புலவர் மகாநாட்டில்

திரு. த.வே.உமாமகேசுவரம்பிள்ளையவர்கள் கூறிய

# வரவேற்பு.

இம் மகாநாட்டினைக் கூட்டி தமிழ்மொழியின் ஆக்கத்திற்கு இன்றியமையாத வழி துறைகளைக் கண்டு தமிழர் முன்னேற்றத்திற்கு அடிகோல வேண்டுமெனவும், இம்முயற்சி முட்டின்றி முடிதற்கு எளியேனது உதவியும் வேண்டற்பாலதெனவும், இங்குள்ள தமிழன்பர் சிலர் என்னிடம் தெரிவித்தனர். இச்செய்தி பெரு வியப்பையும் மலைப்பையும் விளைத்ததெனினும், தாய்மொழியின் ஆக்கத்தினை வளர்த்து நாட்டின் நலத்தைப் பெருக்கவல்லதாகிய தொண்டு என் மனக்கினிய தொன்றாகையால், இவ்வரும் பணியைச் செவ்வனே புரிதற்கான செல்வம், கல்வி, ஆக்குந்திறன் ஆகிய சிறப்பியல்கள் என்னிடம் இல்லையே எனக் கருதவுமின்றி, இம்மகாநாட்டினைக் கூட்ட முயலும் உண்மையன்பர்களின் குழுவில் யானும் ஒருவனென விரைவிற் சேர்ந்துகொண்டேன்.

நாட்டின் நலங்கருதி உழைத்துவருஞ் சங்கங்கள் மிகப்பல. இச் சங்கங்கள் குருடர் யானை கண்ட காட்சியைப் போலவே நாட்டின் நலப்பாட்டில் ஒவ்வொரு பகுதியே சாலுமென நினைந்தும், பல திறத்தனவாகிய மேம்பாட்டிற்கும் அடிப்படையான கலைநூற்புலமை, தூயசிந்தை, பரந்த உள்ளம், மனத்திண்மை, ஒப்புரவொழுகல், ஆக்குந்திறன், பொதுநலத்தொண்டு இன்னோரன்ன பெற்றிமைகள் மக்களிடை அமையாவழி தமது முயற்சிகள் பாழ்படுமென்பதை அறிந்துகொள்ளாதும், தமது எண்ணம் நிறைவேறாது தளர்வுற்றும், ஒருவரோடொருவர் மலைந்து கலாம் விளைத்தும் வருகின்றனர். அரசுரிமைகள் யாவையும் ஒருங்கே எய்தி சுயஆட்சி புரிவதால் நாடு நலஞ் சிறக்குமெனுங் கொள்கையை மேற்கொண்டு கிளர்ச்சிபுரிந்து வருஞ் சங்கங்கள் மிகப்பல. உழவுதொழில், கைத்தொழில், சிற்பம், ஓவியம், வாணிபம் ஆதிய பொருளாதாரங்களைச் செழுமையுறச்செய்து பொருள்வளத்தைப் பெருக்குவதால் நாடு நலமுறுமெனக் கருதி உழைத்து வருஞ் சங்கங்கள் மிகப்பல. நமது நாட்டிலுள்ள மக்கட் பகுதியினர் தாந்தாமும் உலகியல் நிலையில் உயர்தரம் எய்த முயலுவதால், இந்தியரெனும் மக்கட்டொகுதியின் ஒவ்வொரு பகுதியினரும் செம்மையுற்று, இந்திய சமூகமும், அதனையே அங்கமாகக்கொண்ட இந்தியநாடும் முன்னேறுமெனக் கருதி



முயன்றுவரும் வகுப்புச் சங்கங்கள் மிகப்பல. இவையேயன்றி மக்களின் மனநலங்களைத் தூய்மையாக்கி மனிதவாழ்க்கையைச் செழுமையுறச் செய்வதால் நாடு நலம்பெறும் என உழைத்துவரும் சமயச் சங்கங்களும் சமய சமூகங்களின் சீர்திருத்தச் சங்கங்களும் எண்ணிறந்தன. இன்னனைய சங்கங்களில் தலைவராயும், உறுப்பினராயும், தொண்டர்களாயும் இருந்து பணியாற்றுபவர் எண்ணிறந்தவர்; இவர்கள் மிக்க அறிவும், ஆற்றலும் உலைவிலா உழைப்புங் கொண்டவரென்றாலும், அன்னார் அளவிறந்த இன்னல்கட்கிடையே அகப்பட்டு அவமே துன்புறுகின்றனரன்றி அவர் தம் சிறந்த நோக்கங்கள் நிறைவேறியதைக் கண்டாமில்லை. இச் சங்கங்களின் நோக்கங்கள் மிகச் சீரியனவா யிருந்தும், நாட்டின் நலத்தையே நாடுவனவாயிருந்தும், தத்தம் கொள்கைகளையே நாட்டப் புகுந்து மக்களிடைப் பிளவுகள் மிகுந்து வருகின்றன. பல கொள்கையினரும் வேற்றுமைகளை மறந்து தாய்மொழி வளர்த்தல் என்ற சிறந்த நோக்கத்துடன் ஒருமித்து அதற்கானவன புரிதலால் தமக்குள் ஒற்றுமை, கல்வி, அறிவு, ஆற்றல் முதலியன வளரவும், பிறர் கொள்கைகளில் மேம்பாடுகளை அறியவும், அனைவரும் எற்கும் முறையில் ஒருங்கே தொண்டாற்றவும் வழிதிறக்கவல்ல இம் முத்திறத்தனவாகிய மகாநாடுகள் மிகவும் வேண்டப்படுவனவாகும்.

பண்டைக்காலம் முதல் நாகரிகத்தின் உயரிய நிலையை அடைந்த தேசங்களின் சரித நூல்களை நன்கு ஆராய்ந்தவர், மொழிமதுகையில் தலைசிறந்தகாலை நாடுகள் உயர்நிலை யெய்தவும்; மொழிவலம் குன்றியகாலை நாடுகள் கீழ்நிலை யெய்தவும் காண்பர். பாபிலோனியர், எகுபதியர், ஈபுரூவர், யவனர், உரோமர் ஆதிய மக்களின் தலையெடுப்பும் வீழ்ச்சியும், இவ்வுண்மையினை நன்கு தெரிக்கும். இற்றை நாளிலும் எழுத்துவழக்கற்ற மக்கள் நாகரிகத்தின் கீழ்த்தரத்தில் தாழ்வுற்றிருப்பதும் மொழிவலத்தில் உயர உயர நாகரிகத்தின் மேற்றரத்தில் உயர்வதும் கண்கூடு. கலைநூற் புலமையில் மிகச் சிறந்தவர் உவந்தளிக்கும் வாழ்வன்றோ அரசரின் கொற்றம்! நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்களையும் அவற்றோடு தொடர்புற்றிருக்கும் பல திறத்தனவாகிய சக்திகளையும் நமக்கு அடிமையாக்கி நமது குற்றேவல்களைப் புரியச் செய்வது புலமைமிக்கோரது செயலன்றி வேறென்ன? கலைவாணரது பெருந்துணையால் நாடுநகரங்களை வென்று பொருளின் பெருவளங்களைக் கொள்ளும் பேரரசர் தமக்கு வாழ்வளித்த புலமைமிக்கோரை நன்மதிப்புடன் பேணமறந்து சின்னீரவாகிய புலனுகர்ச்சியில் மூழ்குங்காலை மதுகையிழந்து, நாட்டின் நலனிழந்து நாகரிக நிலையில் தாழ்வடைகின்றனர். 'புத்திமான் பலவான்' என்பது முதுமொழியன்றோ? உலகெல்லாம் இருள் நிறைந்து, அதில்வாழும் மனிதரனைவரும் விலங்குகளேபோல் திரிந்த பண்டைக்காலத்தே, தமிழ்மக்கள் நாகரி

கத்தின் உன்னத நிலையை அடைந்தவராய், தமிழ்நாட்டு மூவேந்தரும் இமயத்தில் தமது இலச்சினையை நாட்டிய கொற்றம் மிக்கவராய், தென்குமரியொடு வடவிமயம் ஒருமொழிவைத் துலகாண்ட வியத்தகும் வீரராய், தெய்வப் புலவர்களுடன் தோழமைகொண்டு அன்னார் நன்மதிப்பைப் பெறுவதே தமது வாழ்க்கையின் விழுப்பயன் என்னும் கொள்கையினராய் இருந்து அரசு புரிந்தது உலகறிந்த உண்மை. தமிழர்கள் வாணிபத்தில் தலைசிறந்து விளங்கினர். பட்டினும், மயிரினும், பருத்திநூலினும் இயற்றிய பாலாவியன்ன மெல்லிய ஆடைகள், பொன், முத்து, பவளம், அகில், சந்தனம், தோகை, தந்தம் ஆகியவற்றைக் கப்பல் வழியாலும், நிலத்தின் பெருவழியாலும், அராபியா, எகுபதிநாடு, பாரசீகம், மெசபடோமியா, பலஸ்தீன், கிரேக்கநாடு, உரோமாபுரி ஆகிய தூரதேசங்களுக்கெல்லாம் தமிழ்நாட்டு மிதுவளங்களைக்கொண்டுபோய் வர்த்தகம் புரிந்திருக்கின்றனர். சிற்பம் ஓவியம் ஆகிய அருங்கலைகள் அறுபத்துநான்கினும் தமிழர் சிறந்த புலமை மிக்கோர் என தஞ்சை இராசராசேச்சுரம், சித்தன்னவாசல் சித்திரம், காவிரியணை என்பன போன்ற செயற்கரிய சிற்பங்கள் சான்றுபகரும். தொல்காப்பியம் போன்ற இலக்கண நூலையும், திருக்குறள் போன்ற அறநூலையும், சிலப்பதிகாரம் போன்ற இயல் இசை நாடகநூலையும், அகப்பொருள் புறப்பொருள்களின் இலக்கிய நூல்களையும் இயற்றிய எண்ணிறந்த புலவர்களையும் கொண்ட நாடு நில உலகில் தமிழ்நாடொழிந்த எங்கேனும் உண்டா? அற்றைநாளில் சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை மூவேந்தர்கள், குறுநிலமன்னர்கள், நிலக்கிழார்கள், அமைச்சர்கள், வாணிபர்கள், மருத்துவர்கள், பெண்மக்கள் ஆகிய அனைவரும் மாண்புமிக்க புலவர்களாய் இருந்தனர். தமிழ்நாடு கலைமலிந்த நாடாக விளங்கிற்று. அரசரும் குடிகளும் கல்வியே கருந்தனமெனவும், அதனைத்தேடுவதே தமது வாழ்க்கைப்பயன் எனவும் நினைத்து தமிழ்க்கலைகளைப் போற்றி வந்தனர். அதுகாறும் அவர்கள் வெற்றிக்கு வீழ்ச்சியே யில்லை. கலைத்திறன் சுருங்கச் சுருங்க கல்லாமாக்களுக்கு அடிமைப்பட்டு, தமிழர் தந்நாகரிகத்தின் தனிச் சிறப்புகளை மறந்து, பிறமொழியாளரின் இழிதகவான கொள்கைகளை மேற்கொண்டு, அடிமை வாழ்வில் அகப்பட்டு மீளும் வகைதெரியாது திகைத்து நிற்கின்றனர். நமது பிறவிப் பிணிகளாய் நம்மைப் பிணித்திருக்கும் சில ஆரியக் கொள்கைகளினின்றும் நாம் விடுதலை பெற்றாலன்றி நமது நாடு விடுதலைபடையாது என்பது ஒருதலை. பண்டைத் தமிழரின் நாகரிகச் சிறப்பினை நாம் உணர்ந்து கோடற்கு இன்றியமையாத சாதனங்களாயிருப்பன தமிழ்நூற்களே யாதலால் அவற்றையும், இற்றைநாளில் மேம்பாடடைந்துவரும் பிறநாட்டினரின் கலைத்திறன் முதலியவற்றையும் ஒருங்கே நன்கு கற்றுத் தெளிவடைந்தால் எல்லாவகையிலும் நாம் முன்னேற்றம் அடைதல் கூடும்.



ஆதலால் நமது நாட்டின் முன்னேற்றத்திற்கெனத் தொண்டுபுரியும் மூதறிஞர்கள், கல்வி வளர்ச்சியே பல்வகை முன்னேற்றத்திற்கும் அடிப்படை என்பதை நன்குணர்ந்தனர். ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலமாக பல்கலைக் கழகங்களை நிறுவியும், கோடிக்கணக்கான தொகைகளைச் செலவிட்டும், அக்கழகங்களுக்குரிய கலாசாலைகளில் பயின்றுதேறும் மாணவர்க்குப் பட்டங்களையும் பதவிகளையும் வழங்கியும், ஆங்கிலநூல், கணிதநூல், சரிதநூல், தத்துவநூல், இரசாயனநூல், பூதநூல், இயற்கைநூல், அறநூல், சிற்பநூல், மருத்துவநூல், இன்னோரன்ன கலைகளின் நுண்மாண்பொருள்களைக்கற்றுவல்ல இளைஞர்களை ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் தயாரித்து விடுகின்றனர். இன்னணம் தேறிவரும் மாணவர்களால் நாடு எத்துணை மேம்பாடடைந்திருக்கிறதெனச் சிந்தித்துத் தெளிவடைதல் அறிவுடையோர் கடனாகின்றது. இப்பட்டதாரிகள், தாம் அரிதிற்கற்ற கலைத்திறனை வயிறு வளர்ப்பதற்கான பதவிகளைத் தேடுதற்குரிய கருவிகளாக மதித்தார்களே யன்றி, அக்கலை யறிவுகளைப் பிற்றைநாளில் வளர்க்கவோ, ஆங்கிலமறியாத கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன்படும் வழியில் போதிக்கவோ, நாட்டின் வளம் பெருகுதற்கான தொழில் முறைகளில் மேனாட்டுக் கலைவாணரைப்போல் பயன்படுத்தவோ முயன்றார்களில்லை. பல்லாண்டுகள் முயன்று தாம் கற்ற கலையுணர்வுகளை நாளடைவில் முற்றும் மறந்து அவை சிறிதுமே பெறாத மாந்தர்களைப்போல் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். தாம் பெரிய கலைவாணர்களெனவும், சிறந்த பட்டதாரிகளெனவும் இறுமாந்து தமது நாட்டினர், உற்றார், உறவினர் ஆகிய மக்களது நடை, உடை, ஒழுகலாறுகளை அவமதித்து அவர்களுடன் தோழமை கொள்ளாதும், அன்னார் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறப்புறுமாறு சமூகத் தொண்டுகளைப் புரியாதும், தனித்த சாதியினராகப் பிரிந்து 'நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள்ளாது' இருந்து வருகின்றனர். அன்றியும் அரசியலார் வழங்கிவரும் உயர் பதவிகளைப் பெறவேணுமென்ற வேட்கையால் விழுங்கப்பட்டு, நாட்டு மொழிகளையும், நமது மூதறிஞர்கள் எய்ப்பில் வைப்பென வைத்துப்போந்த தெய்வப்பனுவல்களையும் நன்குணராது வீணே வளர்ந்துவரும் பட்டதாரிகள் பல்கலைக் கழகங்களின் உறுப்பினராயும், கல்லூரித்தலைவர்களாகவும், கல்வித் தலைவர்களாகவும் பதவிகளைப் பெற்று, நாட்டு மொழிகள் தலையெடுக்க வொண்ணாது சூழ்ந்துவரும் கேடுகட்கு அளவுதானும் உண்டோ? தாய்மொழி வளர்ச்சியில் கருத்துடைய ஒருசிலர் அதன் பொருட்டாகக் கொணரும் திட்டங்களை ஏற்காது, 'தான் றேறான் தேற்றியுந் தேறான்' என்ற கூற்றிற்கு இலக்கியமான இவ் வன்கண்ணர்கள் மறுப்புகள் கூறிக் கவிழ்த்துவிடுகின்றனர். இத்தகைய தீய பண்புகள் நிரம்பியோர் மிகுந்திருக்கும் பல்கலைக் கழகங்களிலாதல், கல்லூரிகளி

லாதல் தாய்மொழிக்கல்வி போற்றி வளர்க்கப்படுமென எண்ணுதல் ஏழை மதியன்றோ?

நமது நாட்டு மக்கள் கல்வியில் முன்னேற வேண்டுமென விரும்புவோர், தமது நாட்டுமொழியில் கல்வி புகட்டுவதை விட்டு, அன்னிய மொழியில் கற்பிக்கமுயலும் பேதைமை நாகரிக உலகத்தில் எங்கேனும் உண்டா? தொடக்கப் பள்ளிக்கூடங்கள், உயர்தரப் பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் எனப் பலதிறத்தனவாகக் கல்வி நிலையங்களை நாடெங்கும் பரப்பி, விழலுக்கிறைத்த நீரெனவே கோடிக்கணக்கான தொகைகளைச் செலவிட்டு நூற்றாண்டுகளின் மேலதாக முயன்றதன் பயனென்ன? கையெழுத்தேனும் வரையவல்லவர்களை யுள்ளிட்டு நமது நாட்டில் நூற்றுக்கு நால்வரே கற்றவர் உளரென மதிப்பிடப்படுகிறது. எஞ்சியுள்ள தொண்ணூற்றறுவரும் கைச்சாத்திடத்தானுங் கற்பதற்கு இன்னும் எத்துணை ஊழிகள் செல்லவேண்டும்? கலைகளில் வல்லராதற்கு அதனினும் மிக்க பலஊழிகள் செல்லவேண்டுமன்றோ? குருடரெனவும், கல்லாமாக்களெனவும், நாகரிக உலகத்தினரால் இகழப்பட்டு, நேற்றுவரை படுகுழியில் ஆழ்ந்துகிடந்த ஜப்பானியர் ஐம்பதாண்டுகளிற் குள்ளாக மேனாட்டினரும் திகைப்புறும் வண்ணம் மதிவலமும், படைவலமும், பொருள் வலமும் பெற்றுத்திகழ்வது, அவர்தம் நாட்டுமொழி அளித்த மதுகையன்றோ? தமது சுமைகளை எடுக்கவும், தாம் சவாரி செய்யவும் வேண்டி, குடித்தனக்காரர் தீனி வைத்தும் சேணமாதியவற்றால் ஒப்பனை செய்தும் வளர்த்துவரும் குதிரை முதலிய கால்நடைகளைப் போன்று, தமது ஏவல்வழி நின்று பணியாற்றுதற் பொருட்டு துரைத்தனத்தார் வழங்கும் பட்டம் பதவி முதலியவற்றால் அழகு செய்யப்பெற்ற பட்டதாரிகள், தமது உண்மை நிலையைச் செவ்விதின் உணராமலும், நாட்டின் நலந்தைச் சிறிதும் கருதாமலும் கல்வி வளர்ச்சிக்குச் சிறந்த கருவி தாய்மொழி அன்றென அறியாது கூறிக் கேடு விளைக்கின்றனர். உலகவழக்கழிந்தொழிந்து சிதைந்தமையால் பிணமொழி (Classical Language) எனக்கருதப்படும் மொழிகட்குத் தனிச்சிறப்பும் ஆதரவும் இடங்கள்தோறும் தேடுகின்றனர். இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம், வேதாந்தம், மருத்துவம் ஆதிய பிரிவுகளில் தலைசிறந்த தமிழ் நூற்கள் பலவிருந்தும், சென்னை—அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் தலைவர்கள் தமிழ்க்கலைகளின் சிறப்பை நன்குணராமலோ, பிறமொழியின்மாட்டுத் தாம் தவறி வைத்திருக்கும் சார்பினாலோ, தமிழ் மாணவர்க்கு வித்துவான் என்ற ஒரு பட்டமே வழங்கவும், வடமொழியாளர்க்கு மட்டும் பல்வகையினவாகிய சிரோமணி, வித்துவான் பட்டங்களையும் வழங்கி வருகின்றனர். உயர்தனிச் செம்மொழிகளென அறிவுடையோர் போற்றும் சீரிய மொழிகளின் பெற்றிமைகளில் ஒன்றும் பொருந்-



தாத 'இந்தி' என்னும் மொழி அரசியல் மேம்பாட்டிற்கு இன்றியமையாத சாதனமெனச் சாதிக்கின்றனர். பள்ளியிறுதி (S. S. L. C.) ஆதிய தேர்வுகளில் அம்மொழியைக் கட்டாய பாடம் ஆக்கவும் வேண்டுமென்கின்றனர். அம்மொழியின் வாழ்வு நேற்றையதெனவும், அது பயிலிடம் மிகச் சுருங்கியதெனவும், அரசியற் கிளர்ச்சியின் மேம்பாப்பில் நீர்க்குமிழிபோல் தோன்றி மறையுங்கொள்கைகளைப்போன்ற பெற்றிமையதென்றும் நம்மவர் சிறிதும் சிந்தித்தாரில்லை. இவ்வாறாக ஆங்கிலம், வடமொழி, இந்தி ஆதிய பிறமொழிகளின் ஆக்கத்தைத் தேடுதலில் கருத்துடையராய், தாய்மொழி வளர்ச்சியில் கவலைகொள்ளாது அதனைப் புறக்கணித்துவரும் பட்டதாரிகள் நிறைந்துள்ள பல்கலைக் கழகங்களையும், கல்வி நிலையங்களையும் நம்பியிருத்தலில் பயனேதுமுண்டோ? பல்கலைக்கழகத்தினர் B. A. வகுப்பில் V. வது தமிழ்த்தொகுதியையும்,B. A. தமிழ் Honours பட்டத் தேர்வையும் அனுமதித்திருந்தும், தமிழ் நாட்டிலுள்ள முதற்றரக் கல்லூரிகளில் எத்தனை கல்லூரிகள் இத்தேர்வுகட்கு வசதி தருகின்றன? சட்டசபையிலுள்ள தமிழ்நாட்டு உறுப்பினரும், நமது மந்திரிமார்களும், ஆட்சித்தலைவர்களும் இக்கருமத்தில் தமது கருத்தைச் செலுத்துவாராகில் தமிழ் நாட்டிலுள்ள அரசியலார் கல்லூரிகள் (Government Colleges) யாவற்றினும் இத்தேர்வுகட்குரிய வசதிகள் மிக எளிதில் வாய்த்திருக்குமன்றோ? சென்னை நகரிலுள்ள பச்சையப்பன் ஆதிய முதற்றரக் கல்லூரிகள் யாவும் தமிழ் மொழிக்கு உயர்பதம் அளிக்காது அறவே புறக்கணித்திருப்பது தமிழ்நாட்டுத் தலைவர்களின் கவனத்திற்குரியதன்றோ? சென்னைப் பல்கலைக் கழகத்தார், கீழைத்தேயமொழிகளின் பட்டத்தேர்வுகள் (Oriental-titles Examinations) செய்து பட்டமளிக்க வசதிகள் அமைத்திருக்க வடமொழி பயில்வோர்க்குப் பதினெட்டு கலாசாலைகளும், தமிழ்மொழி பயில்வோர்க்குத் திருவையாற்று அரசர் கல்லூரி ஒன்றிலும் ஓர் ஒதுக்கிடம் வாய்த்திருப்பதன் காரணம் யாது? அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினர் இசைநூற்புலமையை வளர்த்தற்கு அண்மையில் விதிகளமைத்தனர். பொருளுணர்ச்சியில்லாத 'கிராமபோன்' போன்ற மனிதராகிய இசைக் கருவிகளை இயற்றுவது அறிவுடைமை யாமோ? இதனை நன்குணர்ந்த அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் இசைக்கலை யாசிரியர்கள் ஆங்கிலம், வடமொழி, தெலுங்கு எனும் மூன்று மொழிகளிலும் சிறிதளவு பயிற்சியை மாணவர் பெறவேண்டுமெனக் கருதிப் பாடதிட்டங்களை யமைத்து தமிழை அறவே ஒதுக்கிவிட்டனர். இஃது அறிவுடையோர் எள்ளி நகையாடற்குரியதொரு செயலல்லவா? பண்சுமந்த பாடல்கள் எனவும், தெய்வத் தமிழ்ப் பனுவல்கள் எனவும், தமிழ்நாடுபோற்றும் தேவார திருவாசகங்களையும், திவ்வியப் பிரபந்தங்களையும், திருப்புகழ் திருவருட்பா ஆகிய

இசை நூல்களையும் அவமதித்து ஒதுக்கிய வன்கண்ணர்களை இசை ஆசிரியர்களாய் அமர்த்திய அப்பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் நன்மதிப்பை எங்ஙனம் பெறுதல் கூடும்? தேவாரத் திருப்பாடல்களாலும், திவ்வியப் பிரபந்தங்களாலும் பல்லாயிர ஆண்டுகளாக உயிர்பெற்று விளங்கும் திருக்கோயில்களைப் புதுக்குந் திருவினர்கள், அத் திருக்கோயில்களுக்கு உயிரும் வாழ்வும் ஒருங்கே அளித்த தெய்வப் பனுவல்கள் அங்கு வீறுடன் வழங்குதற்கு வசதிகள் செய்ய நினையாது, தன்னலமே கருதும் தீத்திறத்தாரது பொய்யுரைகளில் மயங்கி, கனஞ்சடையென்றுருவேற்றிக் கண் மூடிக் கதறும் வேதக்கிடைகளை நிறுவுதற்கு முற்படும் ஏழைமைக்கு என்னென்றிரங்குவேம்! இத்தகைய நிகழ்ச்சிகளைக் கூர்ந்து நோக்குவோர், இதுபோது தமிழர் விழிப்புடையராயில்லை யெனவும், நாட்டிற்கும் நமக்கும் நலந்தரவல்ல கருமங்களைச் சூழ்ந்து முடிக்காது உயர்பதங்களிலுள்ள தன்னலம் பெருக்கும் வன்கண்ணர்களின் பொய்யுரைக்கு அடிமைப்பட்டு நாட்டின் நலங்களை வீணே கெடுக்கின்றனர் எனவும் தெற்றெனத் தெளிவர்.

சிலகாலமாகக் கரந்தைத் தமிழ்ச் சங்கமும், பிற தமிழ்ச் சங்கங்களும் இயற்றிவரும் கிளர்ச்சிகளின் பயனால், கலைநூற்களை மாணவர்கள் எளிதிற் கற்றுத் தெளிவு பெறுதற்குரிய கருவி ஆங்கிலமல்லவெனவும், சிறந்த கருத்துக்களை அறிதற்கென ஆங்கிலமொழியைக் கற்பதற்கே பதினான்கு ஆண்டுகள்வரை முயலுதல் பயனற்ற முயற்சியெனவும், தாய்மொழியே கல்விக்கு ஏற்ற கருவியெனவும் தமிழ் நாட்டுக் கலைவாணர்கள் மனங்கொண்டனர். சிற்சில ஆசிரியக் கழகங்களிலும் (Teachers Guids) அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் இத்தகைய முடிபுகள் நிறைவேறுகின்றன. பள்ளியிறுதித் தேர்வில் (S. S. L. C. Examination) ஆங்கிலமொழிந்த கலைகள் பற்றிய வினாக்களுக்குத் தத்தம் தாய்மொழியிலே மாணவர்கள் விடை பகரலாமெனும் உரிமையை அரசியலார் வழங்கியுமிருக்கின்றனர். என்றாலும், இத்திருந்திய முறையானது என் ஆட்சிக்கு வரவில்லை என்று கூர்ந்து நோக்குங்கள். உயர்தரக் கலாசாலைகளைப் (High Schools) புரந்துவரும் தலைவர்களும், நாட்டுக் கழகங்களும் (District Boards) நகரக் கழகங்களும் (Municipalities) பட்டங்கள் பெற்ற கலாசாலை ஆசிரியர்களும் தாய்மொழிப்பற்று சிறிதும் இல்லாதிருத்தலேகாரணமென்பது விகசிதமல்லவா? தாய் மொழியில் கலை நூற்களைக் கற்பித்தால் மாணவர்க்கு ஆங்கிலப்புலமை குன்றிவிடுமென்கின்றனர். இது, இக்கொள்கையினரின் திரிபுணர்ச்சியால் கண்ட முடிபேயன்றி, தமது அனுபவத்தால் அறிந்த உண்மையல்ல. தஞ்சாவூர் சில்லா, பாபநாசம் உயர்தரக் கலாசாலையில் தலைமை ஆசிரியராயிருந்த காலத்தும், இதுபோது பூளைமேட்டு உயர்தரக்கலாசாலையின் தலைமை ஆசிரியராயிருக்கும் போதும், தமிழ்மொழியில் மாணவர்க்குக் கலையுணர்வு



தந்துவரும் திருவாளர் R. சீனிவாசய்யங்கார் அவர்கள் B. A., L. T., இம்முறையைக் கையாளுவதால் மாணவர்களில் பெரும்பான்மையோர் தேர்வுகளில் வெற்றி யடைகின்றனர் எனவும், ஆங்கிலத்தில் திறமை எய்தி உயர்ந்த எண்கள் (Marks) பெறுகின்றனர் எனவும் சான்று பகர்கின்றனர். (see Hindu Literary Supplement dated 18-7-32) திருச்சிராப்பள்ளித் தேசீயக்கல்லூரியின் தலைவர் திரு. V. சாரநாதய்யங்கார் அவர்கள் M. A., சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் திரு. இராவ்பகதூர் T. M. நாராயணசாமி பிள்ளை M. A. B. L. அவர்களின் தலைமையில் 'இந்திய நாட்டுப் பல்கலைக் கழகத்தின்வேலை' என்பது பொருளாகப் பேசியஞான்று, தாய்மொழியைப் போற்றவேண்டியது இன்றியமையாததென விளக்கியதுடன், கலைநூற்களைக் கற்பதற்குத் தாய்மொழியே சாலச் சிறந்ததெனவும் மொழிந்தனர். இசுலாமியர் பல்கலைக் கழகத்தினர் தோற்றிய காலம் முதல் அருங்கலை யனைத்தையும் நாட்டுமொழியாகிய 'உருது' வில் மாணவர்க்குப் போதிக்கும் தனிச் சிறப்பைக் கொண்டு விளங்குகின்றனர். தாய்மொழிப் பயிற்சியால் ஆங்கில மொழித்திறன் குன்றிவிடுமென்பது தவறுபட்ட கொள்கை என்பது வெளிப்படை. மற்றொருசாரார் கலைநூற்களைப் போதிப்பதற்குத் தாய்மொழியில் எழுதிய கருவி நூற்கள் இல்லையெனவும், அறிவுநூற்பொருள்களைச்செவ்வனேஉணர்த்தவல்ல மரபுச்சொற்கள் (Technical words) இல்லையெனவும், வாய்பாடுகள் (Formulas) இல்லையெனவும் கூறுகின்றனர். இதுவும் நிரம்பிய அறிவு, ஆற்றல், முயற்சி முதலியன இல்லாத வெள்ளறிவினர் கூறும் தடையாகும். ஆங்கிலத்திலும், தமிழிலும் புலமை மிக்க தமிழறிஞர் சிலரை ஒன்று சேர்த்து இன்றியமையாத பணவுதவிகளை அரசியலாரும் பல்கலைக் கழகத்தினரும் புரிந்தால் இக்குறைபாடு மிக எளிதில் அகன்று விடுமென்பதில் ஐயமேயில்லை. காலஞ்சென்ற திரு.பா.வே. மாணிக்க நாயகர் அவர்கள் வடிவு நூலில்(Geometry) பயின்றுவரும் மரபுச் சொற்களுக்கு ஏற்ற தமிழ்ச்சொற்களை மிகமிக எளிதில் படைத்துவிட்டனர். அத்திருவினரின் ஒப்புயர்வற்ற தமிழ்ப் புலமையினைத்தமிழர் பயன்படுத்திக் கொள்ளாத ஏழைமைதான்என்னே! என்னே!! இசுலாமியா பல்கலைக் கழகத்தினர் கலைநூற்களை உருதுமொழியில் எழுதுவோர்க்குப் பரிசு வழங்குவம் என விளம்பரஞ்செய்து உயர்தரப் படிப்பிற்கான கலைநூற்களை எளிதாக அம்மொழியில் ஆக்கிக்கொண்டனர். இத்தகைய முயற்சி தமிழ் நாட்டில் இன்னே தொடங்கப் பெறுமாயின், பிற்றைநாளில் யாம் பெறும் தமிழ்ப் புலமையால் இக்கலை நூற்கள் தாய்மையாக்கப் படுமன்றோ?

(இன்னும் வரும்)

உ

# கொண்டாட்டமா? கொலையாட்டமா?

அந்தோ! அக்கோயிலைக் குறுகவும் உடலும் உயிரும் பதைக்கின்றனவே! அவ்விடத்துப் பொங்கலின் கோரத்தை உரைக்க நாக் கூசுகின்றதே! நினைக்க நெஞ்சம் புண்ணாகின்றதே! காணக் கண் கலங்குகின்றதே! கேட்கவும் செவி செவிடாகின்றதே! சகல உயிர்களையுங் கருணையால் காக்குங் கடவுள்முன், அன்பு வடிவான கடவுள் முன், பரிசுத்தமான கடவுள் முன், சன்மார்க்கமும் ஞானமும் நிறைந்த கடவுள் முன், சத்தியவடிவான சாந்தன் முன், நடுநிலைமையுடைய நாதன் முன், *ஆறறிவு படைத்த மனிதர்—அன்பும் இரக்கமுங் கொண்ட மனிதர்—மக்களைப் பெற்று வளர்த்ததன் அருமையறிந்த மனிதர்—விபூதியும் நாமமும் தரித்துக்கொண்டு அரகரா சிவசிவா வென்னும் மனிதர்-அஹிம்ஸா தர்மத்தின் உண்மை அறிந்த மனிதர்-நாயை அன்புடன் வளர்க்கும் மனிதர்-பூனை, குரங்கு, கிளி முதலிய ஜீவராசிகளைக் குழந்தையைப்போல் வளர்க்கும் மனிதர்-தங்களுடலில் காயம் படின் கண்ணீர் வடிக்கும் மனிதர்-ஐயையோ! நா வரவில்லையே! நம்மைப்போல் நடமாடும் ஆடுகோழிகளை, அம்மா! அம்மா! வென்றுடி ஓடுகின்ற ஆடு கோழிகளை, குட்டிகளைப் பெற்றுக் குடும்பம்போல் வாழும் ஆடுகோழிகளை, நிரபராதிகளாகிய ஆடு கோழிகளை, நம்மை நம்பி நம்மோடு குழந்தைகள் போல் வாழும் ஆடு கோழிகளை, பால்கொடுக்கவும், விடியற்காலையில் எழுப்பவும் படைக்கப்பட்ட ஆடு கோழிகளை, தங்களுடலையே ஆஸ்தியாக மதித்துள்ள ஆடுகோழிகளை, தங்களுக்கு வரும் ஆபத்தையறியாத ஆடு கோழிகளை, அநியாயமாக ஐயோ! ஐயோ! கொஞ்சமேனும் இரக்கமின்றிக் கரத்தில் வாளேந்தி பதைக்கப் பதைக்க உயிர்வேறு உடல்வேறாக வெட்டப் போகின்றார்களே! அவைகள் துடிதுடிக்குங் கோர காக்ஷியைக்கண்டு களிக்கப் போகின்றார்களே! அவைகளின் அழுகுரலைக் கேட்டு ஆனந்திக்கப் போகின்றார்களே! அவைகளின் இரத்தப்பெருக்கைக் கண்டு பெருமை கொள்ளப் போகின்றார்களே! அவைகளின் ஊனைத் தின்று உடலை வளர்க்கப் போகின்றார்களே! இதுதான் தெய்வபக்தியாம்! பிரார்த்தனையாம்! பூஜையாம்! பொங்கலாம்! புண்ணியமாம்! மதமாம்!



சாமியாம்! அந்தோ! அந்தோ! ஓ மானிடக்கூட்டமே! இரக்கமில்லையா? நெஞ்சங் கரையவில்லையா? மனமென்ன கருங்கல்லா? பஞ்ச மகா பாதகத்தின் முதன்மையான கொடிய கொலையை-தலையறுப்பதை-உடலையும் உயிரையும் பிரிப்பதை எந்தத் தெய்வம் விரும்பும்? இந்த இருபதாம் நூற்றாண்டிலுங் கூடவா உங்கள் பாமர பாட்டனின் பக்தி! சிச்சி! மூடபக்தி! மூடபக்தி!! விடுங்கள்; பலியை விடுங்கள். தலையறுப்பதை விடுங்கள். புலாலையுங் கள்ளையும் சாராயத்தையும் விரும்பி யலையுங் கொடிய பூசாரிகள் கூற்றைக் கேளாதீர்கள். பாற்பொங்கல் படையுங்கள். பூவாலும் புனலாலும் பூஜியுங்கள். சன்மார்க்க பூஜை யித்தே. இதனால் வரும் புண்ணியத்தைப் பெறுங்கள்.

தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபையார்,
தங்கசாலைவீதி, சென்னை.

---

# கோயில்.

சைவம், சாக்தம், காணாபத்தியம், பைரவம், கௌமாரம், பாசுபதம், வைஷ்ணவம் முதலியன இந்நாட்டிலுள்ள மதங்களிற் சிலவாகும். ஸ்ரீ சிவபிரானார், பார்வதீ தேவியார், கணபதி, பைரவர், குமரன், உருத்திரன், விஷ்ணு முதலியோர் முறையே அச்சமய முழுமுதற் கடவுளர். ஒவ்வொரு மதத்தினருந் தமது கடவுட்கமைத்துள்ள கோயில்கள் அளவிறந்தன. அவற்றுள் சைவ சமயக் கோயில்களில் ஸ்ரீ சிவலிங்கப் பெருமானார்மட்டுந் தனித்தெழுந்தருளியிருக்கமாட்டார். பார்வதீ தேவியார், கணபதி, வீரபத்திரர், பைரவர், குமரன், விஷ்ணு, நாயன்மார் முதலிய பல மூர்த்திகளும் அவரோடுடனுறைந்தருளுவர். ஆனால், அப்பரமனாது பரத்துவம் அத்தனைபேருங் கூடவிருத்தலாற் சிறிதும் பாதிக்கப்படாது. அவருக்கு உமையம்மையார் மனைவியும், விநாயகர் முதலிய நால்வர் மைந்தரும் ஆகி அம்சங்களாவார். மற்றை மூர்த்திகளெல்லாம் அவரது அருள்பெற்ற மீளா அடிமைகளே. ஆகலின், சிவாலயங்களையே ராஜ கிருகம் என்னலாம். ராஜா—கோ. கிருகம்—இல். ராஜகிருகத்தில் குற்றேவலாளனு மிருப்பன்றனே? ஆனால், சாக்தேய முதலிய பிறமதக் கோயில்களிற் சிவலிங்கப் பிரதிஷ்டையைக் காண்டல் அருமை. அடிமைக் குடிலில் அரசனுக் கென்னவேலை?

கா. ரீராஜமாணிக்கம் பிள்ளை.

உ

## தேவாராதி திருப்பாசுரங்களும்—ஓதத் தகுவோரும்.

அநாதி மலமுத்த பரமபதி, ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு அருளிச்செய்த முதல்நூல்கள் வேதம் சிவாகமம் என்னும் இரண்டு மாம். வேதம் வடமொழியிலுள்ளது. அது, தருக்கம் வியாகரணம் முதலிய கருவிநூல்கள், புராண இதிகாசங்களாகிய உபவிஷயங்கள், இவைகளை நன்குணர்ந்தவர்க்கன்றி மற்றையோர்கட்குப் பொருள் விளங்காததாயும், துவிஜர்களுக்கே பயன்படுவதாகவும், ஆகமமும் விதிப்படி சிவதீட்சை பெற்றவர்கட்கே பயன்படுவதாகவும் உள்ளனவாம். எனவே, இவ் விரண்டும் பொதுவாகக் குறிப்பினளவாய் சிலருக்குமாத்திரமன்றிப் பலருக்கும் பயன்படுதல் இலவாம்.

இவ் விரண்டின் உண்மைகளையெல்லாம், சைவப் பெரியார்கள் இவ்வுலகம் உய்யும்பொருட்டு இறைவன் ஆணைப்படி ஆவின்பாலிற் கடைந்தெடுத்த அமிர்தம்போலப் பன்னிரு திருமுறைகளாகத் தமிழ்வேதங்களை அருளிச்செய்தனர். அவை தேவாரம் முதல் திருத்தொண்டர்புராண மீறாக உள்ளன. எத்தகையோரது கல்நெஞ்சமும் ஒருகாற் கேட்பினும் கரைந்துருகும் இசையமைப்புடன் சிவபெருமானுக்கு உத்தமோத்தமமாகிய தோத்திரப்பாமாலைகளாக உள்ளன.

இத் திருமுறைகள், மெய்யன்போடு பிழையின்றி முறைப்படி ஓதச் செய்பவர்களுக்கும் ஓதுபவர்களுக்கும் இம்மை மறுமைப் பயன்களை மிக எளிதில் அளிக்க வல்லனவாம். இவற்றில் முதலேழு திருமுறைகட்குத் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் பிறந்த பெண் ஒருத்திபால் இறைவ னாணைப்படி சோழராஜன் கனகசபையின்கண் பண் வகுக்கும்படி கேட்க, அந்தப்படி அவள் வகுத்த போது, அக் கனகசபையின்கண் கூடியிருந்த பெரியோர்களில் தேவாரக் கருவூலத்தினராகிய பண்டாரத்தார்கள் என்று வழங்கும் சைவநன்மக்களே நன்குணர்ந்து பண்களை முறைப்படி ஓதிவருதல் வழக்கத்தி லிருக்கிறது.

இவ்வாறாகவே, பண்டைக்காலம் தொடங்கி இத் திருமுறைப் பண்களை வகுக்கப்பட்ட முறைப்படி பண்டாரத்தார்கள் என்று



வழங்கும் தேசிகர், குருக்கள், பட்டாரகர், மற்றும் சில ஓதுவார்கள், ஆதிசைவர், அந்தணர் முதலியவர்களும் ஓதிவந்ததாக நன்கு புலப்படுகிறது. இக்காலத்தில் மேலே குறித்தவர்களிற்சிலர் திருக்கோயில் சந்நிதானங்கள், திருவிழாக்கள், திருவுலாக்கள், சைவப் பிரசங்கஞ் செய்யுமிடங்கள் ஆகியவற்றில் அவ்வச்சமயத்திற் குதந்தவாறு முறைப்படி தமிழ்மறைகள் ஓதவேண்டியதை அறிந்தோ அறியாதோ பண்களை அமைத்துக்கொண்டு குறித்த விடம் இன்னதென்பதை மறந்து சாதாரணப் பாடல்களாகக் கருதிப் பாடிவருகின்றார்கள். முறையாகப் பாடுபவர்களைக்கொண்டே திருமுறைப் பாக்களைப் பாடச் செய்யும்படி சிவபுண்ணியசீலர்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தி. சிவலோகநாத தேசிகர்,
தமிழ்மறைவாணர், கோட்டையூர்.

## தீண்டாதாரும் கோயிற் பிரவேசமும்.

தீண்டாதாரைக் கோயிலுட் செல்ல விடுவதோ, அல்லவோ என்பதை யோசிக்க அக்டோபர் 5உ ஸ்ரீரங்கம் திருச்சிராப்பள்ளிகளிலுள்ள இந்துக்கள் ஒரு மகாசபை கூட்டினர். தென்னிந்திய தேவஸ்தானக் கூட்டத் தலைவராகிய ஸர் T. தேசிகாச்சாரியரே அச்சமயத்தில் சபைத் தலைவராயிருந்தனர். ஸ்ரீ C. இராசகோபாலாச்சாரியார், "தீண்டாச்சாதியினரைக் கோயிலுட் பிரவேசிக்க விடாமையினாலேயே, அவர்களுள் அநேகர் அந்நிய சமயப் பிரவேசஞ் செய்கிறார்கள். தீண்டாச் சாதியினரையே நன்னிலைப்படுத்தல் வேண்டும். அவர்களைப் புறக்கணிப்பது சரியல்ல. இனியேனும் கோயிலுட் பிரவேசிக்க விடல் வேண்டும்." என்று பேசினர்.

திருக்கோஷ்டியூர்ச் சுவாமிகள், "ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியருடைய கொள்கையைக் கண்டித்து, இதுகாறும் எல்லா வருணத்தவரும் எல்லாச் சாதியாரும் இங்கே சமாதானமாகக் காலங்கழித்து வருகிறார்கள்; இப்பொழுது நேர்ந்துள்ள அரசியற் கிளர்ச்சிகளுக்குத் தீண்டாதாரைக் கோயிலுட் பிரவேசிக்கவிடாமை ஒரு சிறிதுங் கார

ணமல்ல; அதற்கு வேறு காரணங்கள் உண்டு; சமய விஷயத்தில் சாஸ்திரங்கள் விதித்தபடியே நடக்கவேண்டும்; தங்களுடைய சமயம் முறை திறம்பும்போது—சாஸ்திரக் கட்டுப்பாடு அழியும்போது, அவற்றைத் தடுக்கும்படி தாங்கள் உண்ணாவிரத மிருக்கவும் உயிர் விடவும் சித்தம்" எனச் சொல்லினர்.

ஸ்ரீ எம். எஸ் கிருஷ்ணமாச்சாரியார் இந்த விஷயம் உடனே யோசித்து முற்றெடுக்கத்தக்க தல்ல; ஆராய்ச்சிசெய்து அபிப்பிராயம் கூறுவதற்குச் சிலமாசங்கள் வேண்டுமென்று சொல்லினர். ஸ்ரீ ராம சாஸ்திரிகள் ஸ்ரீநிவாசசாஸ்திரிகள் என்னுமிருவருள் பிந்தியவர் பின்வருமாறு கூறினர்: "இந்தப் பரதகண்டத்தில் எத்தனையோ சாதியார் படையெடுத்துப் பல தீமைகளையும் அழிவுகளையும் விளைத்த காலங்களிலும் எங்கள் சமயக்கொள்கைகளும் கட்டுப் பாடுகளுமே எங்களுடைய சமயத்தைப் பாதுகாத்து வந்தன. சமயத்தை நாங்கள் நினைத்த நினைத்தபடி மாற்றுவதற்கு எவ்வாற்றானும் முடியவே முடியாது; சமயம் எங்களால் ஆக்கப்பட்டதன்று. சமயக் கொள்கைகளையும் ஆசாரங்களையும் மாற்றிவிட்டால், விபரீதப்படுத்திவிட்டால், பின் அதனை இந்துமார்க்கமென்று, இல்லையேல் வைஷ்ணவம் சைவம் என்று சொல்லுதல் முடியாது. அது வேறு சமய மென்றல்லவா பெயர்பெறும்? ஆதலால், ஒருபோதும் சாஸ்திரத்தை மீறி நடப்பதற்கு நாம் உடன்படமாட்டோம்" என்று சொல்லினர்,

சபைத்தலைவரவர்கள் இந்த விஷயம் பிரதான சனங்களுடைய நோக்கத்தை நன்கு ஆராய்ந்த பின்னரே ஏதுஞ்செய்யத்தகும்; இதனைப்பற்றித் தம்முடைய அபிப்பிராயத்தை இப்பொழுது வெளியிடுதல் முடியாது. ஆறுதலாக யோசிக்க வேண்டுமென்று சொல்லி முடித்தனர்.

---

அன்று நந்தனர் தமது தோழர்களை அழைத்துக்கொண்டு திருப்புன் கூர்க் கோயிலுக்குச் சென்றார். மலைபோன்ற நந்தி வழி மறித்திருந்தது.

இன்று சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் தமது தோழர்களை அழைத்துக்கொண்டு சுவாமி தரிசனம் செய்யச்சென்றால் அதே காட்சியைக் காண்பார். நந்தி விலகி யிருக்குமா?

(ஆ. விகடன்)

உ

# பலவான்குடி குமாரவிநாயகர் பஞ்சரத்நம்.

பரிமணங்குடி

வித்துவான் திரு. மு. முத்துப்பிள்ளை அவர்கள் இயற்றியது.

அமரகண மேத்த வடியார்க் கருள்வன்
குமரகண நாதனென்றைக் கும்.

1. செந்தமி ழோடு சிவநேச மோங்கச் செகதலத்தில்
வந்தருள் நூல்வர் மகிழ்ந்தேத் திடப்பல வான்குடிவாழ்
தந்தியின் மாமுக சங்கரி யீன்ற தனயகுன்றைக்
கந்தச கோதரா காப்பாய் குமர கணபதியே!

2. பூதலத் தேதிருத் தொண்டர்மெய்க் காதையைப் பூசுரனுக்
கோதுவித் தேசிவ சாதன மெங்கணு மோங்கிடச்செய்
தாதரித் தோய்பல வான்குடி யைங்கை யருளிறைவ
காதலித் தேத்தெமைக் காப்பாய் குமர கணபதியே!

3. வாமுற்ற செல்வப் பலவான் குடியை மகிழ்ந்துநிரந்
தாமுற்ற வைசியர் சந்ததம் போற்றத் தயைபுரியு
மூமுற்ற தாரக மந்திர ரூப முடனுறையைங்
காமுற்ற வாவெமைக் காப்பாய் குமர கணபதியே!

4. புருகூத ஞாதி விபுதர்முப் போதினும் பூசனைசெய்
தொருவா துறலிற் பலவான் குடியென் றுரைக்குநகர்த்
திருவா சகமட மோங்கிடச் சைவஞ் சிறப்பவனா
கருணா கரவெமைக் காப்பாய் குமர கணபதியே!

5. சீரார் தனவை சியர்பல வான்குடி சேர்ந்துசெல்வத்
தாரா யெனமல ரிட்டருச் சித்தடி தாழ்ந்துசெயு
மாரா தனையேற் றனைவரு முய்ய வருண்மழைபெய்
காரார் முகிலெமைக் காப்பாய் குமர கணபதியே!

---

# சிவநேசனுக்கு மதிப்புரை.

[சென்னை மறைத்திருவாளர் மகாமகோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்கள்.]

'சிவநேசன்' புத்தக உருவில் மாதப் பத்திரிகையாக வெளி வருவதும், அங்ஙனம்வருவதற்குக்காரணமும் அறிந்துகொண்டேன். இரண்டு இதழ்கள் வரப்பெற்றுப் பார்த்தேன். விளக்கம்போல் சிவ சமய சம்பந்தமான விஷயங்களைத் தாங்கிவருதலையும் தங்கள் தனி முயற்சியினால் வெளியிடப்படுதலையும் உணர்ந்தேன். இந்தப்

பத்திரிகை மேன்மேலும் சிறந்த விஷயங்களைக்கொண்டு வெளிவந்து, பலரால் ஆதரிக்கப் பெற்றுவர வேண்டுமென்று ஸ்ரீ ஆனந்த நடராஜப் பெருமான் றிருவருளைச் சிந்திக்கின்றேன்.

[பரம்பரைத் திருப்பணிச் செல்வர் மகாவித்துவ சிரோமணி வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியாரவர்கள்.]

'சிவநேசன்' செந்தமிழ்த் திங்கள் வெளியீடு வரப்பெற்றுக் களியாடல் கொண்டேன். பத்திரிகை யளவில் அதிகமுடைத்தாயிருந்த பால், சிறிது சுருங்கக் காய்ச்சிச் சர்க்கரை யிட்டதுபோல், மடிக்கப் படாத புத்தக ரூபமாய் வந்திருப்பது, காட்சிக்குஞ் செவியறிவிற்கும் பயன் பயப்பதாயும் அழகுடைத்தாயும் இருக்கின்றது.

[மகிபாலப்பதி பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்.]

இதுகாறும் வாரத்தாளாக வெளிப்போந்து சைவ வுலகிற்குப் பயன்விளைத்துவந்த 'சிவநேசன்' இப்போது திங்கட் டாளாக வெளிவருதலைக் கண்டு மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன். உலகியற் செய்திகள் பல விரைந்து கிடைப்பதற்குரிய சாதனங்கள் குறைவாக வுள்ள ஒரு சிற்றூரினின்றும் பத்திரிகை வெளிப்படுத்த எண்ணின், புலவர்பெருமக்களின் அரிய கட்டுரைகளைத் தன்னகத்தேகொண்டு மக்களுக்கு நல்லறிவுச்சுடர் கொளுத்தும் திங்கட்டாளாக வெளிப் படுத்துதல் நலமாகும் என்பதென் கருத்து. இது குறித்தே 'சிவநேசன்' தோன்றுங் காலத்தே அதனை மாதப்பத்திரிகையாக வெளியிட்டு வரவேண்டுமென்று யான் கூறினேன். அவ்வமயம் சிவநேசர் பலரும் சைவசமயத்திற்கு மாறான கொள்கைகளை அடிக்கடி கண்டித்தற்கு வாரத்தாளாக வெளியிடுதலே நலமாகுமென்று எண்ணினமையால், அவ்வெண்ணப்படி சில ஆண்டுகள் வரை 'சிவநேசன்' வெளிப்போந்துலாவியது. அதுவும் பொருத்தமே.

இனி, சைவசமய உண்மைகளும், தமிழ்நூலாராய்ச்சிகளும் அறவுரைகளும் தன்பாற்கொண்டு திங்கள் வெளியீடாகச் 'சிவநேசன்' சைவ உலகில் திகழ்ந்துலவித் தன் நோக்கங்களை நிறைவேற்றுதலே மிக நலமாகும். இம்முறையில் அண்மையில் வெளிப்போந்த இரண்டு சஞ்சிகைகளும் நிலவுகின்றன. திங்கள் வெளியீட்டிற்குரிய உள்ளுறைகள் பல செவ்வன் றிகழ்கின்றன. காகிதம் அச்சு முதலிய செயற்கை யழகும் வாய்ந்துளது.

நாளுளும் நுண்மாணுழைபுலமிக்க அறிஞர் பலர் கட்டுரைகளை விசேடமாகத் தாங்கிச் சைவத்தமிழுலகிற்குப் பெரிதும் பயன் விளைக்கும்வண்[illegible]மிழ் பாடுகென்ற தாமறை பாடும் வாயார்' [illegible]வநேசன் நீடுவாழ்க!

# செய்தித் திரட்டு.

அண்ணாமலை நகர்:—அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் சபாமண்டபத்தில், ஷை கழகத்தின் கூட்டம், கனம் சென்னை கவர்னர் துரையவர்கள் தலைமையில், 27—10—1932 காலை 8மணிக்கு நடைபெறும்.

பொன்விழா:—சென்னை, சுதேசமித்திரன் ஐம்பதாவதாண்டு நிறைவுப் பொன்விழாவைப் பாராட்டி, அதன் இருபத்தைந்தாவதாண்டு வெள்ளி விழாத் தலைவராயிருந்த கோவிற்பட்டி உயர்திரு சாமி விருதை சிவஞான யோகி அவர்கள் நூற்றுப்பத்து அடிகளையுடைய அகவற்பாவும், மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர் திரு. சு. நல்லசிவன் பிள்ளையவர்கள் எழு ஆசிரிய விருத்தங்களும் வழங்கி வாழ்த்தியுள்ளார்கள். நாமும் மனமார வாழ்த்துகின்றோம்.

பரிமணங்குடி:—ஸ்ரீ சண்முகநாத சுவாமிகோவிலில், புரட்டாதி நுவ கார்த்திகைமுற்பகல் விசேட அபிடேக ஆராதனங்களுடன் அடியவர்க்கமுதருத்தி, இரவு சைவ சன்மார்க்க சங்கத்தில் தமிழ்மறை முழங்க இன்னிசைக் கருவிகளுடன் திரு. மு. முத்துப்பிள்ளை முதலானவர்களால் திருப்புகழாதிய பாடி, மூருகம்மையார் சரித்திரமாதி ஆத்திக விரிவுரைகளும் பிறவும் நடைபெற்றன.

ஓர் அதிசயப் பிறவி:—திருவள்ளூருக்கு வடகிழக்கில் 3 மைல் தூரத்திலுள்ள 'தண்ணீர்க்குளம்' எனும் கிராமத்தில் வன்னியகுல ரெட்டியார்கள் வகுப்பில், திரு. விஜயராகவரெட்டி நாயகருடைய மனைவி திரு. பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு 1—10—32 சனிக்கிழமை பகல் ஓரே பிரஸவத்தில் இரு ஆண் குழந்தைகள் பிறந்தன. ஒன்று பெரிது; மற்றொன்று அதில் பாதியளவு வளர்ச்சியுள்ள சிறியது. சிறிய குழந்தை பெரிய குழந்தையின் வலது புறத்தில், எப்படித் தாயானவள் குழந்தையை இடுப்பில் வைத்துக்கொள்வாளோ, அப்படியே பெரிய குழந்தையின் இடுப்பில் இருப்பதுபோல் தலைமுதல் இடுப்பு வரையில் பெரிய சிசுவின் முகத்தைப் பார்ப்பதுபோல் உடம்போடு உடம்பாய் ஒட்டிக்கொண்டிருக்கிறது. சின்ன குழந்தைக்கும் ஒரு தலையும் இரண்டு கைகளும் இருக்கின்றன. எனினும், வாயும் கண்களும் இன்னும் திறக்கவில்லை. பெரிய சிசு மூச்சுவெளியில் விடும்போது, சின்ன சிசுவின் உடம்பிலிருந்து மூக்கு வழியாய் மூச்சு வெளிவருகிறது; மார்பு எழும்பித் தணிகிறது. பெரிய சிசு பால் உண்டால், சின்ன சிசுவும் தொண்டை வழியாய் உட்கொள்வதும் நன்கு தெரிகிறது. பெரிய சிசுவின் உடலைச் சிறிய சிசு தனது இரு கைகளால் தழுவிக் கொள்வதுபோல் வைத்துக்கொண்டிருக்கிறது. இதன் இரு கைகளும் பெரிய சிசுவின் கைகளைப் போலவே நீட்டவும் மடக்கவும் இருக்கின்றன. சின்ன சிசுவுக்கும் தலையில் மயிர் வளர்ந்திருக்கிறது. ஆனால், தலையின் பின்புறத்தில் கரப்பான் சொறிசிரங்கு மூடியிருக்கிறது. பெரிய சிசு அழும்போது சிறிய சிசுவின் குரல் தெரியாவிட்டாலும் கண்ணில் நீர்வடிகின்றது. இடுப்பின் கீழ் பெரிய ஆண் குழந்தையின் உருவமும் இருகால்களுமே இருக்கின்றன. இது அந்தம்மாளின் ஆறாவது குழந்தைப் பிரசவம். சின்ன சிசுவின் மூக்கில் நடுப்பிரிவு தண்டு ஒன்றும் தென்படவில்லை. தாய்ப்பால் குறைவால் வெள்ளாட்டுப்பால் அல்லது பசுவின்பால் புகட்டி வருகின்றனர்.

உ

# சிவநேசன்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயஉண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மையாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு | ரூ 2 4 0 | அதற்கு மூலதனம் | ரூ 30 0 0 |
| அயல்நாடுக்கு | ரூ 3 0 0 | அதற்கு மூலதனம் | ரூ 40 0 0 |

தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருப நேயர்கட்கு அறிவிப்பு.

௧. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகைநேயராயிருத்தல்வேண்டும். ௨. வரையும் விஷயங்கள், சமயநிந்தனை சாத்திர நிந்தனை, தெய்வநிந்தனை, ராஜநிந்தனை ஆதிய நிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். ௩. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ௪. வருங் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ௫. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப்படமாட்டா. ௬. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக் கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்.

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லாவித அச்சு வேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர்மனதிற்குகந்த வண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

**அமைச்சர்**